# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 புரட்டாதி 21 புதன்கிழமை (07-10-1998) UTHAYAN - A Lively National Tamil Daily சுடர்:268


# பொ.ஐ.முன்னணி அரசுக்கு எதிராக

# நம்பிக்கை இல்லாப் பிரேரணை!

## கிளிநொச்சி இராணுவப் பேரிழப்பை காரணம் காட்டி ஐ. தே. க. முஸ்தீபு

கொழும்பு, ஒக்ரோபர் 7

ஸ்ரீலங்காப் படைகளுக்கு கிளிநொச்சியில் ஏற்பட்ட பேரிழப்பைக் காட்டி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சில பிரமுகர்கள் முயற்சி எடுத்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஐ. தே. க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா, லண்டன் மற்றும் மேற்கு நாடுகளுக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று கொழும்பு திரும்புவதாக இருந்தார்.

அவர் கொழும்பு திரும்பியதும் ஐ. தே. க. பிரமுகர்கள் முன்வைத்துள்ள — அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றிய— ஆலோசனை குறித்து அவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஈ.பி.டி.பியைச் சேர்ந்த

## கரவெட்டி பிரதேசசபை உறுப்பினர் நேற்றிரவு சுட்டுக் கொல்லப்பட்டார்

### மந்திகையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 7

கரவெட்டிப் பிரதேச சபையின் ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினரான கனகசபை இராஜதுரை [46 வயது] நேற்றிரவு 7.45 மணியளவில் மந்திகையில் உள்ள அவரது வீட்டில் வைத்து இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மந்திகையில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் தனது பணியை முடித்துக் கொண்டு 200 மீற்றர் தூரத்தில் — விவசாய விரிவாக்க நிலையத்துக்கு அருகில்—உள்ள தமது

(10 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று யாழ். நகரில்

## இளைஞர் மீது தாக்குதல்: மூன்று படையினர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். நகரில் இளைஞர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்று சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு இராணுவப் பொலீஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பலியான படையினரின்

## சடலங்களை அடையாளம் காண்பதில் குளறுபடி!

கொழும்பு, ஒக். 7

மாங்குளம், கிளிநொச்சிச் சமர்களில் உயிரிழந்த படையினரின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைப்பதில் ஆள்மாறாட்டம் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாங்குளம் சண்டையில் உயிரிழந்ததாகத் தெரிவித்து அதிகாரி ஒருவரின் சடலம் 'சீல்' செய்யப்பட்ட பெட்டியில் ஹொரகம்பிட்டி என்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்கள் பேரணி!

### மூதூரில் போராட்டம்

மட்டக்களப்பு, ஒக். 7

சர்வதேச ஆசிரியர் தினமாகிய நேற்று திருகோணமலை மாவட்டம் மூதூர் கல்வி வலய ஆசிரியர்கள் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

ஆசிரியர்களின் தொழிற் சங்க நடவடிக்கை காரணமாக மூதூர் கல்வி வலயப் பாடசாலைகளில் நேற்று ஆசிரியர் தின வைபவங்கள் எதுவும் நடைபெறவில்லை.

★ 1997—1998 ஆம் ஆண்டுகளுக்குரிய பயங்கரவாத பிர

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விமானம் வீழ்ந்தது குறித்து

## விசாரணை நடத்தும் பொறுப்பு அமைச்சிடம்!

கொழும்பு, ஒக். 7

இரணைதீவுக் கடற்பகுதியில் வீழ்ந்த 'லயன் ஏயர்' விமானம் தொடர்பான விசாரணைகளை விமானப் போக்குவரத்துத் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது.

'லயன் ஏயர்' விமான நிறுவன அதிகாரிகள் இதுவரை இது தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வந்தனர்,

இந்த விசாரணைகளில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெரோயின் வைத்திருந்த நபருக்குத் தண்டனை

யாழ்ப்பாணம், ஒக். 7

ஹெரோயின் போதை வஸ்து வைத்திருந்ததாகக் கூறப்படும் பலாலி விமான நிலைய ஊழியர் ஒருவருக்கு ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும் அல்லது ஆறு மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதமன்றம் தீர்ப்பு வழங்கியது.

பலாலி விமான நிலையத்தில் வகுப்புத் தொழிலாள

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் விமான சேவைக்கு இப்போதைக்கு அனுமதி இல்லை!

கொழும்பு, ஒக். 7

இரணைதீவுக் கடலில் ''லயன் ஏயர்'' விமானம் வீழ்ந்ததற்கான காரணத்தைக் கண்டுபிடிக்கும் வரை யாழ்ப்பாணத்துக்கான விமான சேவையை நடத்த அனுமதி வழங்குவதில்லை என்று பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடந்த உயர் மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்தை சீராக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக பாதுகாப்பு செயலாளர் சந்திரானந்த டி. சில்வா தலைமையில் இந்த மாநாடு கூட்டப்பட்டிருந்தது.

பாதுகாப்புத்துறை அதிகாரிகளும், வடமாகாண மீள்குடியமர்வு, புனரமைப்பு அதிகார சபை அதிகாரிகளும் இந்த மாநாட்டில் பங்கு பற்றினர்.

கீழ்காணும் முடிவுகள் அங்கு எடுக்கப்பட்டன.

★ கடலில் வீழ்ந்த விமானம் தொடர்பான விசாரணைகளை நடத்தி விமானம் வீழ்ந்ததற்கான சரியான காரணத்தைக் கண்டறிந்த பின்னரே விமான சேவை பற்றி முடிவு செய்யப்படும்.

★ யாழ்ப்பாணத்திற்குச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் கொடும்பாவி எரிக்கும் போராட்டம் இன்று தமிழகத்தில்!

சென்னை, ஒக். 7

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும்—

இலங்கை அரசுக்குஎதிராக ஆட்சேபம் தெரிவிக்கும் வகையிலும்—

இன்று தமிழக மாவட்டங்களின் தலைநகர்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் இந்தப் போராட்டம் குறித்து அறிவித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கைதை ஆட்சேபித்து

## ரூ. 5 கோடி நஷ்டஈடு கோருகிறார் நீதிபதி!

கொழும்பு, ஒக். 7

இரகசியப் பொலீஸார் தம்மைக் கைது செய்து தடுத்து வைத்ததை ஆட்சேபித்து அதற்கு நஷ்ட ஈடாக ஐந்து கோடி ரூபா வழங்க வேண்டும் எனக் கோரி கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி மகாநாம திலகரட்ண கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் இரகசியப் பொலீஸ் பணிப்பாளர் பத்துல விக்கிரமசிங்க இரகசியப் பொலீஸ் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் புண்ணியடி சில்வா, சட்டமா அதிபர், பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்

(10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் அருள்பெற என்றும்

# பிரார்த்திக்கின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
''கௌரவ இலக்கிய கலாநிதி'' பட்டம் பெற்ற
ஓய்வு பெற்ற பேராசிரியர் கலாநிதி

**கா. கைலாசநாதக்குருக்கள்**

அவர்களுக்கும்

துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி
'' கௌரவ கலாநிதி ''

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அம்மையார் அவர்களுக்கும்

கௌரவ முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்ற
இளைப்பாறிய பிரதிப் பதிவாளர்

**உயர்திரு. த. காசிநாதன்**

அவர்களுக்கும்

என்றும் அன்னையின் பரிபூரண அருள் வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு, அப்பெரியோர்கள் நீடூழிவாழ்ந்து சிறப்புப் பெறுவதோடு பல்கலைக்கழகப் பெரியோர் களின் சிறப்பான பணிகள் மேலும் சிறக்க மனதார பிரார்த்திக்கின்றோம்.

சுபம்!

சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள் குடும்பத்தினர்
அம்பாள் கோயில் - நயினாதீவு - சுதுமலை
(59702)

# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் முதலாம்வருட
கணிதநெறி ஆசிரிய மாணவன்

திரு. கா. இலங்கேசனின்

அன்புத்தாயார்

**கா. அன்னப்பிள்ளை**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர் மன்றம்.

பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி. (59700)

# 90ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

## அகால மரணம்

மலர்வு
21 — 03 — 1970



உதிர்வு
07 — 07 — 1998

**திருமதி ஜெ. சுகந்தி**
**(கன்னிப் பெயர் சபாரத்தினம்)**

கவரிமான் பரம்பரையில் வந்தவள் தன் மானம் காக்க தன்னுயிர் மாய்த்தாள். மாய்ந்த போதும் எவரையும் குற்றவாளியாக்காமல் தன்னையே பொறுப்பென்றாள்.

நாலுமாதமே மணவாழ்க்கை
வாழ்ந்தநாள் நரகமே என்றாள்
மரணமே மேல் என்றாள்
பெண்ணானால் இதுதான் நியதியோ!
பெண்ணடிமை என்றுதான் ஒழியுமோ?
பெண்ணடிமைக்குப் பெண்தான் காரணமோ?
காரணம் ஆயிரம் சொல்லலாம்; ஆனால்!
உண்மை ஒன்று தான்!
காலம் பதில் சொல்லும்
உண்மை நின்று வெல்லும்.

நேரிலும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும், தொலைபேசி மூலமும் ஆறுதல் சொன்ன உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்
நன்றி கூறும்

திரு. திருமதி
பா. சபாரட்ணம்,

திரு. திருமதி
கா. திருக்கேதீஸ்வரன்,

திரு. திருமதி
ச. நாவலன்,

செல்வன்
ச. திலீபன்

(39697)

# மேலும் இருவருக்கு வாந்திபேதி

யாழ்ப்பாணம், ஒக். 7

வாந்திபேதி காரணமாக மேலும் இருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாரந்தனையைச் சேர்ந்த முத்து அகஸ்டீன் (வயது 63) கந்தப்பிள்ளை நவரட்ணம் (வயது 52) ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-139)

# முதியோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 7

வலி.வடக்கு செயலகப் பிரிவில் சர்வதேச சிறுவர் தினம், முதியோர் வாரம் ஆகியவற்றையொட்டி விசேட வைபவம் நாளை பிற்பகல் 2-00 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும், முதியோர் கௌரவிப்பும் இந் நிகழ்வில் இடம்பெறும். (உ-3)


**SHAMROCK**
A/L 2000
Common General Test
வழிகாட்டல் வகுப்பு
புதிய பிரிவு: 9/10
Fri. 8-00 p. m.
Mr. தவசேகர்

Chris. Mrs. A. மல்லிகா
Hindu. Mr. நித்தி
Log. Mr. மகிந்தன்
Tamil Mr. அருள்
Geo. Mr. BAVAN
(சி/5110)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்
அரவிந்தசாமி
மதுபாலா - ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் - நாஸர்
நடித்த
**ரோஜா**
இனிய பாடல்கள்
நிறைந்தது
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/5020)

**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
07 - 10 - 98 முதல்
மம்முட்டி - அஞ்சு
நடித்த
சத்திரிய வம்சம்
( ரீகல் )
காட்சி: 10-30, 2-30
(சி/5108)

**புதிய ஈசன் கல்வி நிலையம்**
கே.கே.எஸ். றோட்,
மல்லாகம்.
A/L 2000
வணிகக் கல்வி
திரு. அகில்
ஆரம்பம்: 07-10-98
(புதன்)
நேரம்: 5.00 (மாலை)
★ ஏனைய பாடங்களும் நடைபெறும்.
நிர்வாகி
(59692)


# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா தனகோபாலசிங்கம்

(முன்னாள் சாரதி யாழ். இ. போ. ச.)

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஸ்காபறோவில் வசித்து வந்தவரும் இலங்கை போக்குவரத்துச்சபையில் கடமையாற்றிய வருமாகிய திரு. செல்லப்பா தனகோபாலசிங்கம் அவர்கள் 5-10-98 திங்கட்கிழமை கனடாவில் இறைவனடி எய்தினார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா இலக்கொழுந்து தம்பதியரின் அன்புப் புதல்வரும் வீரசிங்கம்- தையல் முத்து ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ் சென்றவர்களான ராசமணி, இரத்தினசிங்கம், சிவ ராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற சுலோசனாதேவி, சிறிஸ்கந்தராசா (கனடா), ஜெயராசா (கனடா), ரஞ்சனாதேவி (கனடா), சற்குணராசா (கனடா), தவராசா (பிரான்ஸ்), பிறேமளாதேவி (கனடா), ராகுலராசா (கனடா), சுரேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், நாகலிங்கம் (இலங்கை), நந்தினி (கனடா), குமுதா (கனடா), கேவராசா (கனடா), சபாரட்ணம் (E. Z. Driving School கனடா), ஈசா (கனடா), கவிதா (கனடா), அமபிகா (கனடா), வினோதா (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும், குருநாதப்பிள்ளை (முன்னாள் தபால் உத்தியோகத்தர், பாலராசா (இலங்கை), பரமேஸ்வரி (ஜேர்மன்), சரோஜினிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், நதுஷன், சஞ்சியா ஆகாஷ், மோகன், ரூபன், ரம்யா, நீதன், நிவேதா, துஷான, அன்ரிக், டிலான், கீர்த்திகன், அனுருத்தியா, சண்முகி ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி சுரேந்திரன் வினோதா,

8/1, புகையிரத தெற்கு வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

கனடா தகவல்;
சிறி - 439 - 7549
சபா - 412 - 7904
தேவன் - 312 - 6154
தவம் - 331 - 48332366

(59696)

பேராசிரியர்

## சின்னப்பா அரசரத்தினம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பேராசிரியர் சின்னப்பா அரசரத்தினம் 5-10-98 இல் ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் நவாலியைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான சின்னப்பா J.P திருமதி ஞானம்மா அவர்களின் அன்பு மகனும், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பத்மாவின் அன்புக் கணவனும், சுலோசனா, Dr. நிறஞ்சனா, நிறஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணரத்தினம் (கனடா) செல்வரத்தினம் (ஜேர்மனி) இரத்தினதேவி ஜெயரத்தினம், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், பஞ்சரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
செ. ஜெயரத்தினம்.
(மைத்துனர்)

நவாலி கிழக்கு,
மானிப்பாய், (59691)

## பொன்னம்பலம் சோதிலிங்கம்

கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை வீதியைச் சேர்ந்த பொன்னம்பலம் சோதிலிங்கம் நேற்றுக் காலமானார்.

அன்னார் சு. பொன்னம்பலம், காலஞ்சென்ற சொர்ணம்மா ஆகியோரின் கனிஷ்ட புதல்வரும், பி. இராஜேந்திரம், பி. சண்முகரத்தினம் (ஆசிரியர், கோண்டாவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை), திருமதி சொர்ணகாந்தி (ஜேர்மனி), காலஞ்சென்ற பொறியியலாளர் மகாலிங்கம், வைத்திய நிபுணர் சொர்ணலிங்கம் (கொக்குவில் மற்றும் வட்டுக்கோட்டை), திருமதி ரமணி ஆகியோரின் சகோதரரும், திருமதி இ. பரமேஸ்வரி, திருமதி ச. பரமேஸ்வரி (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), செல்வரட்ணம் (ஜேர்மனி), திருமதி ம. மலர் (இங்கிலாந்து) வே. செல்வராஜா, திருமதி சொ. ஜெயராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் மேற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
டாக்டர் பொ. சொர்ணலிங்கம்
[சகோதரர்]

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு. [சி/5111]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்ரன் மீதான குற்றச்சாட்டை நீதித்துறைக் குழு விசாரிக்கும்

## ஆதரவாக நேற்று வாக்களிப்பு

வாஷிங்ரன் ஒக்; 7

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வருவது தொடர்பான விசாரணையை ஆரம்பிப்பதற்கு ஆதரவாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் நீதித்துறைக் குழு வாக்களித்துள்ளது.

ஆதரவாக 21 பேரும் எதிராக 16 பேரும் வாக்களித்தனர். நீதித்துறைக் குழுவில் அங்கம் வகிக்கும் குடியரசுக் கட்சியினர் ஆதரவாகவும் ஜனநாயகக் கட்சியினர் எதிர்த்தும் வாக்களித்தனர்.

சுயாதீன வழக்கறிஞர் கென்னற் ஸ்ராரின் பரிந்துரைக்கு ஏற்ப குடியரசுக் கட்சியின் வழக்கறிஞர் ஒருவர் தீர்மானத்துக்கு சாதகமாக 15 கட்சியாளர்களை நீதித்துறைக் குழுக்கூட்டத்தில் முன் வைத்தார்.

கென்னற் ஸ்ராரின் குற்றச் சாட்டுக்கள் சிலவற்றை நீதித்துறைக்குழு தள்ளுபடி செய்து விட்டது. சில குற்றச்சாட்டுகளில் திருத்தங்கள் செய்யப்பட்டன. மேலும் சில குற்றச் சாட்டுக்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. அதன் பின்பே வாக்களிப்பு நடத்தப்பட்டது.

இந்தப்பிரச்சினை குறித்து இந்த வார இறுதியில் முழுச் சபையும் வாக்களிக்க வகை செய்யப்படும் என்று நீதித்துறைக்குழு தெரிவித்துள்ளது.

நீதித்துறைக் குழுவின் வாக்களிப்பு குறித்து கிளின்ரனின் செய்தித் தொடர்பாளர் கருத்துத்தெரிவிக்கையில், குற்றப் பிரேரணை கொண்டு வருவதற்கு ஏற்ற குற்றம் எதனையும் கிளின்ரன் செய்யவில்லை என்று கூறினார்.

வெள்ளை மாளிகையின் முன்னாள் பணிப்பெண் மொனிக்கா லுவின்ஸ்கியுடன் முறைகேடான உறவு வைத்துக்கொண்டதாகக் கூறப்படும் விவகாரத்தில் கிளின்ரன் பொய்ச் சாட்சியம் அளித்து நீதித்துறையில் குறுக்கிட்டார் என்பதே கிளின்ரனுக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

(இ-ரி)

## டில்லியில் பெரியார் மையம்

சென்னை, ஒக்; 7

'பெரியார் மையம்' புதுடில்லியில் அமைக்கப்படவிருக்கிறது. மையத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று புதுடில்லியில் நடைபெறுகிறது. முன்னாள் பிரதமர் வி. பி. சிங் அடிக்கல்லை நடுவார்.

புதுடில்லியில் பாம்னொலியில் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் நிலம் இதற்காக வாங்கப்பட்டுள்ளது.

மைய கட்டடத்துக்காக முதற் கட்டமாக ரூபா ஒரு கோடி வசூலிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 6 மாதத்தில் மையக் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்களை இந்தியா முழுவதும் பரப்புவதே இந்த மையத்தின் நோக்கம். நூல் நிலையம், பெரியார் சுயமரியாதை பிரசாரத்தைப் பரப்பும் புத்தகங்களை வெளியிடுவது, தகவல்களை அளிப்பது ஆகிய பணியில் இம்மையம் ஈடுபடும்.

(இ-10)

## உலக சனத் தொகையில் இந்தியா முதலிடம்பெறும்

புதுடில்லி, ஒக். 7

2050 ஆம் ஆண்டுக்குள் இந்தியா உலகில் மிக அதிகமான சனத்தொகையைக் கொண்ட நாடாக மாறிவிடும் என உலகக் கண்காணிப்புக் கழக அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

2050 ஆம் ஆண்டளவில் இந்தியாவின் சனத்தொகை 153 கோடியை எட்டும் எனவும், சீனாவின் சனத்தொகை அப்பொழுது 151 கோடியாக இருக்கும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சனத் தொகையில் தற்போது ஆறாவது இடத்தில் உள்ள பாகிஸ்தான் 35 கோடி சனத்தொகையுடன் மூன்றாவது இடத்துக்கு வந்து விடும்.

எதியோப்பியா, ஈரான், நைஜீரியா ஆகிய நாடுகளும் அதிக சனத்தொகை கொண்ட நாடுகளாக இருக்கும் என்றும் அறிக்கை தெரிவிக்கின்றது.

(இ-ரி)

## ஆப்கன்- ஈரான் நெருக்கடி மேலும் மோசமடைகிறது

ஆப்கானிஸ்தானுக்கும் ஈரானுக்கும் இடையிலான முறுகல் நிலை மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானுக்கான ஐ. நா. சபையின் விசேட தூதுவர் இரு நாடுகளுக்கும் இடையிலான முறுகல் நிலையைத் தவிர்க்கும் முகமாக தெஹ்ரான் சென்றுள்ளார்.

தூதுவர் ஈரானிய வெளியுறவு அமைச்சர் கமால் கராஸியை சந்திக்கவுள்ளதுடன் அதிபர் கதாமியையும் சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்த முனைவார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### உலக அரங்கில்

## கௌண்டா ஓய்வு பெறுகிறார்

ஸாம்பியா, ஒக்; 7

ஸாம்பிய நாட்டு முன்னாள் அதிபர் கென்னத் கௌண்டா அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாகத் தெரிவித்துள்ளார்.

1991 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது அதிபர் தேர்தலில் தோல்வியடைந்து அரசியலில் இருந்து விலகி ஐக்கிய தேசியச் சுதந்திரக் கட்சியை ஆரம்பித்து மீண்டும் அரசியலில் கால் பதித்தவர் கௌண்டா.

## மயானத்தில் இடநெருக்கடி

## 15 வருட காலம் மட்டுமே புதைகுழியில் சடலம்

## பின்னர் அது எரிக்கப்படும்

சிங்கப்பூர், ஒக். 7

சிங்கப்பூரில் மயானங்களில் பாரிய இடநெருக்கடி ஏற்பட்டு வருவதனால் அங்கு புதைகுழிகள் மீள் பாவனைக்குட்படுத்தப்பட இருக்கின்றன.

எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் இடப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு சிங்கப்பூரில் புதைக்கப்படும் சடலம் ஒன்று 15 ஆண்டுகளுக்கு அதே குழியில் இருக்க அனுமதிக்கப்படும். பின்னர் அவை வெளியே எடுக்கப்பட்டு எரிக்கப்படும் அல்லது முன்பு இருந்த குழிகளிலும் பார்க்க சிறிய குழிகளில் புதைக்கப்படும். புதைக்கப்பட்ட ஓர் உடல் முற்றாக அழிந்து போவதற்கு 15 வருடங்கள் போதுமானது. சடலங்கள் புதைக்கப்பட்டு 15 வருடங்கள் ஆனபின் அவை புதைக்கப்பட்ட ஒழுங்கில் அகற்றப்படும். இவ்வாறு அகற்றப்படும் சடலங்களில் முஸ்லிம், யூதர், பார்சிகள் மற்றும் பாயிஸ் இனத்தவர்களின் சடலங்கள் அவர்களது மதக் கொள்கைகளுக்கேற்ப சாதாரண குழிகளிலும் எட்டிலொரு பங்கு சிறிய அளவுடைய குழிகளிலும் மீள் புதைக்கப்படும்; ஏனையவை எரிக்கப்படும்.

இவ்வாறு எரிக்கப்படும் சடலங்களின் சாம்பல் இதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் வைக்கப்படும்.

இத்தகவலை சிங்கப்பூர் சுற்றாடல் அமைச்சு வெளியிட்டுள்ளது.

(ஐ-6)

## ருஷ்டி கொல்லப்படவேண்டும் என ஈரான் நாடாளுமன்றம் தீர்மானம்

தெஹ்ரான், ஒக்; 7

பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மான் ருஷ்டி கொல்லப்படவேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட மதஆணையை ஆதரிக்கும் தீர்மானம் ஒன்று ஈரானிய நாடாளுமன்றத்தில் விவாதத்திற்குஎடுக்கப்பட்டபோது அரைவாசிக்கு மேலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

1988 ஆம் ஆண்டு எழுத்தாளர் ருஷ்டி மீது ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமேனி ''பத்வா'' எனப்படும் மரண தண்டனை ஆணையைப் பிறப்பித்திருந்தார்.

அதனால் ருஷ்டி தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்.

ஆனால் கடந்த மாதம் ஈரானிய வெளியுறவு அமைச்சர் கமால்கராஸி ருஷ்டிமீதான மரணதண்டனை விலக்கப்பட்டது என அறிவித்திருந்தார். தற்பொழுது நாடாளுமன்றம் இதனை நிராகரித்து வாக்களித்துள்ளது.

(இ-ரி)

### அல்பேனிய இன மக்கள் மீதான

## சேர்பியர்களின் தாக்குதலைத் தடுக்க 'நேட்டோ' விமானத் தாக்குதல்?

பெல்கிரேட், ஒக்; 7

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தனது ஆதரவை வழங்காத போதிலும் கொசோவோ அல்பேனிய இன மக்கள் மீதான சேர்பியர்களின் தாக்குதல்களைத் தடுக்கும் பொருட்டு ''நேட்டோ'' அமைப்பு விமானத் தாக்குதல்களை நடத்தலாம் என்று ஐ. நாவுக்கான பிரிட்டிஷ் தூதர் சேர் ஜெரேமி கிறீன்ஸ்ரொக் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இருபதுக்கும் மேற்பட்ட அல்பேனிய கிராமவாசிகள் படுகொலை செய்யப்பட்டமையை ஐ. நா. பாதுகாப்புச் சபை கடந்த வியாழக்கிழமை கண்டித்திருந்தது.

பெல்கிரேட்டிற்கும் பிரிவினைவாத கொசோவோ விடுதலை இராணுவத்துக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும்—

பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும்—

ஐ. நா பாதுகாப்புச்சபை முன்னர் நிறைவேற்றியிருந்த தீர்மானத்தை பெல்கிரேட் உடனடியாகவும், பூரணமாகவும் மதித்து நடக்க வேண்டும் என்றும் —ஐ. நா பாதுகாப்புச் சபை வற்புறுத்திக் கேட்டுள்ளது.

சேர்பியாவை வழிக்குக் கொண்டு வருவதற்காக விமானத் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் குறித்து பிரிட்டனும், அமெரிக்காவும் தற்போது ஆராய்ந்து வருகின்றன.

ஆனால் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஏனைய இரண்டு நிரந்தர உறுப்பு நாடுகளான ரஷ்யாவும், சீனாவும் இதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

இந்த எதிர்ப்புக்கு மத்தியிலும் மேற்கு நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட 'நேட்டோ' அமைப்பு தனது தாக்குதல் திட்டத்தை முன்னெடுக்கலாம் என்று பிரிட்டிஷ் தூதர்கிறீன்ஸ்ரொக் தெரிவித்தார்.

சேர்பியாவிற்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையில் பங்கு கொள்வதற்கு தமது நாடு தயார் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

கிளின்ரனின் நிர்வாக அதிகாரிகள் இராணுவ நடவடிக்கைக்கான ஆயுதங்கள் குறித்து அமெரிக்க செனற் உறுப்பினர்களுக்கு கடந்த வியாழக்கிழமை விளக்கிய போதிலும் சேர்பியர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா உடன்படுமா என்பது குறித்து இன்னமும் உறுதியாகத் தெரிவிக்கவில்லை.

(ஐ-6-10)

## கிரிக்கெட் விளையாட்டிலும் இனி 'ரை- பிறேக்கர்' முறை!

டாக்கா, ஒக்; 7

கிரிக்கெட் விளையாட்டில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்கு ''ரை-பிறேக்கர் ''முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

தற்போது உதைபந்தாட்டம்மற்றும் ஹொக்கி ஆகிய விளையாட்டுகளில் மட்டும் வெற்றிதோல்வியைத்தீர்மானிக்க 'ரை - பிறேக்கர்' முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பங்களாதேஷில் இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள ''வில்ஸ்'' கோப்பை கிரிக்கெட் போட்டியில் இது அறிமுகப்படுத்தப்படும் என பங்களாதேஷ் கிரிக்கெட் கழகம் அறிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் அமைப்பின் தலைமைச் செயலக இயக்குநர் டேவிட் ரிச்சர்ட்ஸ் கடந்த புதன்கிழமை ''வில்ஸ்''கோப்பை போட்டிகளை முன்னிட்டு டாக்கா வந்திருந்தபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஓர் ஆட்டத்தில் 25 ஓவர்கள் வீசப்படாத நிலையில் ஆட்டம் மழையினால் பாதிக்கப்படும்போது 'ரை - பிறேக்கர்'' முறை செயற்படுத்தப்படும். ஆனால் இறுதிப் போட்டி இவ்வாறு பாதிக்கப்பட்டால் இந்த நடைமுறை மேற்கொள்ளப்படமாட்டாது என பங்களாதேஷ் கிரிக்கெட் கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த முறையின் படி ஒவ்வொரு அணியிலிருந்தும் 5 பேர் பந்து வீச முடியும். எந்த அணி குறிப்பிட்ட பந்து வீச்சுக்களில் அதிக ஓட்டங்களைக் குவிக்கின்றதோ அந்த அணி வெற்றி பெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெற இருக்கும் ''வில்ஸ்'' கோப்பைப் போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், தென் ஆபிரிக்கா,சிம்பாப்வே ஆகிய அணிகள் கலந்து கொள்கின்றன.

(ஐ-6-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் பகுதியில் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 7

குருநகர்ப் பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு குருநகர்ப் பகுதியில் உள்ள சனசமூகநிலையங்களின் ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆரம்பகட்டமாக கசிப்பு உற்பத்திசெய்வோர் இனங்காணப்பட்டு கசிப்பு உற்பத்தியை நிறுத்துமாறு கோரும் கடிதங்கள் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வீடு வீடாகச் சென்று கசிப்புபாவனையால் ஏற்படக்கூடிய தீங்குகள் குறித்துமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தியை நிறுத்துமாறு ஒலிபெருக்கி மூலமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் எதிர் வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கசிப்பு உற்பத்தி நிறுத்தப்படாவிட்டால் குருநகர்ப் பகுதி மக்கள் அனைவரும் சேர்ந்து எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றையும் நடத்த அப்பகுதியில் உள்ள 8 சனசமூக நிலையங்களின் ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குருநகர் பகுதி இளைஞர்கள் இணைந்து கசிப்பு பாவனையால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து தெருக் கூத்துக்களை நடத்தவும் திட்டமிட்டுள்ளனர். (இ-7)

## இடுகுகள் அன்பளிப்பு

செம்பியன்பற்று, ஒக். 7

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் உள்ள நாகர்கோயில் அ. மி. தமிழ் கலவன் பாடசாலைக்கு நாகர் கோயில் முகாம் படையினரால் ஆயிரத்து 500 இடுகுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

(இ-36)

## மரம் நடல்

சண்டிலிப்பாய், ஒக். 7

மானிப்பாய்வட்ட லயன்ஸ் கழகத்தினர் மானிப்பாய் இந்துக்கல்லூரி, சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம் ஆகியவற்றில் மலை வேம்புத் கன்றுகளைக் கடந்தவாரம் நட்டனர். வலயத் தலைவர் லயன் எஸ். தணிகாசலம் இதில் கலந்துகொண்டு மரக் கன்றுகளை நட்டார்.

(இ-135)

## உரிய காலத்தில் கிடைத்த கெயரின் விதை நெல்

வலி.தென்மேற்கு, ஒக். 7

''கெயர்'' ஸ்தாபனம் மூலம் வழங்கப்பட்ட விதை நெல் உரியகாலத்தில் கிடைத்ததால் நவாலி விவசாயிகள் பலர் நன்மையடைந்துள்ளனர் என்று விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நவாலியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 30 பேரில் ஒருதொகுதியினருக்கு வழங்கப்பட்ட மேட்டு நில நெல் குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய இனம் என விவசாயிகளால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (இ-185)


## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதியபோட்டோஸ்ரட் இயந்திரம் [நியூ மொடல் Sf 1118 -Japan] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கெங்கேஸ்வரன், மானிப் பாடசாலை வீதி, டச்சுறோட், உடுவில் என்ற முகவரியில் தொடர்பு கொள்க. (59648)

### தேவை

நகர மாநகரசபை எல்லைக்கண்மையில் எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: இல. 796, C/o, உதயன், யாழ்ப்பாணம்.
(59644)

### இலகுதிருமண சேவை

34 வயது பரணி செவ்வாய் 12, பிராமண மணமகனுக்கு (யாழில் உள்ளார்) மணப்பெண் தேவை. சகல மணமக்கள் தேர்வுக்கு ஞாயிறு காலையில் தொடர்பு கொள்ளவும். துரைவிமலா, 958/8, K.K.S. வீதி, யாழ். நாச்சிமார் கோயிலடி.
(59693)

### இலவசம்

பூனைக்குட்டிகள் இலவசமாகக் கொடுக்கப்படும். சி. சுரேந்திரம், 200, கஸ்தூரியார் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (59690)

### இறைச்சிக் கோழி

எல்லா வகையான இறைச்சிக் கோழிகளும் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தினமும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.
(59522)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சேர் பொன்னம்பலம் இராமநாதன்

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வருடாவருடம் நடத்தப்படும் பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அமைவிடத்தின் ஸ்தாபகராகிய சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களை நினைவு கூருமுகமாக மேற்படி பேருரையைப் பல்கலைக்கழகம் நடத்தி வருகின்றது.

இவ் வருடம், வாழ்நாட் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் ''மதமும் கவிதையும்- தமிழின் அனுபவம்''
'Religion and peetry - The Tamil Experience'
எனும் தலைப்பில் இன்று 07 - 10 - 98 மாலை 3. 00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இப் பேருரையைநிகழ்த்துவார்.

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

= உபவேந்தர்

சி/5102)



## முக்கிய அறிவித்தல்

1. பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் 28 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள ஸ்தாபனம்.
2. யாழ். இந்துக் கல்லூரிக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் அன்பளிப்புச்செய்த சுவாமி விவேகானந்தரின் உருவச் சிலைக்கு (Bust Size) மக்களிடமிருந்து பண உதவியைக் கோரவில்லை.
3. ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஒரு பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனம்.
4. 1969 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை பட்டயக் கணக்காளர் (B. A., F. C. A.) எமது சேவாச்சிரமக் கணக்குகளை Audit செய்து வருகின்றார்.
5. பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பொதுமக்களிடமிருந்து பெறும் நன்கொடைக்கு உடனுக்குடன் பற்றுச்சீட்டு வழங்கி வருகின்றது.
6. அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ஆலய கும்பாபிஷேகத்துக்கு உதவிய அனைவருக்கும் நன்றி.

செயலாளர்
ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.
(சி-5101)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**அன்னம்மா சபாஆனந்தர்**

மலர்வு 01 – 04 –1920    உதிர்வு 17 –10 – 1997

திதி: 07 – 10 – 1998
புதன்கிழமை

ஓராண்டு சென்றதோ அம்மா!— எம்
தந்தையையும் தங்கை ரமணியையும்
இறையடியில் சந்தித்தீர்களா?
ஆத்ம சாந்தி அடைந்தீர்களா அம்மா!
உங்கள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையின் போது
எம்மை ஆசீர்வதிக்கும் வண்ணம் மண்டியிடுகின்றோம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்
மகள் திருமதி தே. அருந்ததி ஆனந்தகௌரி,
மகன்மார், மருமக்கள், பேரர்கள்,
உற்றார், உறவினர்.

ஸ்ரீசாலினி,
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
(59665)



## வாழ்த்திப் பாராட்டுகின்றோம்

காங்கேசன்துறை சாரணர் மாவட்ட போஷகரும்
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான
தலைவரும் ஆகிய
''சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி''
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களுக்கு 'கலாநிதி' விருதுவழங்கியுமையையிட்டு
உளமார வாழ்த்திப் பாராட்டி வணங்குகின்றோம்.
காங்கேசன்துறை மாவட்ட
சாரணர்கள், சாரணர் தலைவர்கள்,
உதவி மாவட்ட ஆணையாளர்கள்,
மாவட்ட ஆணையாளர்,
காரியக் குழுவினர்.
(59681)



## வணங்கி வாழ்த்துகின்றோம்

சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும்பணி ஆற்றியதுடன்
எம் கல்விக்கோட்ட மாணவர்களுக்கும்
எக்காலத்திலும் உதவி புரியும்
சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களுக்கு
கலாநிதிப் பட்டம்
வழங்கியமையையிட்டு வாழ்த்தி மகிழ்வுறுகின்றோம்.
தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட
அலுவலர்கள், அதிபர்கள்,
(59682) ஆசிரியர்கள், மாணவர்கள்.



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்
திரு. நா. ஸ்ரீபுஸ்பநாதன்
அவர்களின் துணைவியார்
**திருமதி அங்கையற்கண்ணி**

அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அன்னாருடைய குடும்பத்தினரின் துயரில் பங்கு கொண்டு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
அலுவலக உத்தியோகத்தர்,
யா/யூனியன் கல்லூரி,
யா/பொன். பரமானந்த ம.வி.
(59673)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு எதனையும் முன்வைக்காமல்

# புலிகளைபேச்சுக்கு அழைக்கமுடியாது

## பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்: 7

"இனப்பிரச்சினை விவகாரத்தில் எந்தவொரு தீர்வையும் முன்வைக்காத சூழ்நிலையில் ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளிடம் எவரும் அழைப்பு விடுக்க முடியாது."

தபால் தந்தி தொலைத் தொடர்புகள் பதில் அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு ஆரையம்பதியில் வீதி அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்றால் அரசு தான் அதற்கான வழிவகைகளைத் தெரிவிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளை மாத்திரம் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று சொல்ல முடியாது. அதற்கு நிபந்தனைகளும் விதிக்க முடியாது. அரசு என்றாலும் சரி எதிர்க் கட்சி என்றாலும் சரி நியாயமான தீர்வுகளையே முன்வைக்கவேண்டும். நியாயமான தீர்வில்லாமல் அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க முடியாது. அதன் அடிப்படையில் தான் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும்.

இவ்விடயத்தில் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இவ்விடயத்தில் சாதகமான முடிவு வரும் பொழுது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். — என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-21)

# புதிய மேயர் தெரிவு மேலும் தாமதமாகும்

கொழும்பு, ஒக். 7

யாழ். மாநகர சபைக்கு புதிய மேயரைத் தெரிவு செய்வது தொடர்பான தீர்மானம் எடுப்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி ஒத்தி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய மேயரைத் தெரிவு செய்வது தொடர்பாக திங்களன்று விசேடகூட்டம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் நாட்டில் இல்லாததால் இக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூட்டணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை மேயர் பொன் சிவபாலன் கடந்த மாதம் 11ஆம் திகதி குண்டு வெடிப்பில் பலியானதைத் தொடர்ந்து அப்பதவி வெற்றிடமாக இருப்பது தெரிந்ததே.

(ஐ-6)

# யுனிசெவ் உதவி

தென்மராட்சி, ஒக். 7

வன்னிப் பகுதியிலிருந்து வந்து கிளாலிப் பகுதியில் உள்ள தமது சொந்த இருப்பிடங்களில் தங்கமுடியாமல் உறவினர் வீடுகளிலும் பாடசாலையிலும் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கவென 100 பாய்களை யுனிசெவ் நிறுவனம் பளைப் பிரதேச செயலகத்துக்கு வழங்கியுள்ளது.

கிளாலிப் பாடசாலையில் நலன்புரி நிலையம் அமைப்பதற்கு கூரை விரிப்புகளையும் யுனிசெவ் வழங்கியுள்ளது.

(இ-117)

# காணாமற்போனோர் பற்றி பொலிஸில் முறையிடலாம்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொலீஸ் நிலையங்களிலும் காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை இதுவரை காலமும் பொலீஸ் நிலையங்களில் பதிவுசெய்ய முடியாமலிருந்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து இப்பதிவுகள் தற்பொழுது பொலீஸ் நிலையங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.

1996 ஆம் ஆண்டிற்குப்பின் காணாமற் போனவர்களின் உறவினர்கள் இந்தப் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸ் நிலையங்களின் இந்த முறைப்பாடுகளைப் பதிவதற்கு உதவியாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் குறிக்கப்பட்ட நபர் காணாமற்போனார் என்பதற்கான உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தைப் பெற்று முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5-6)

# புதிய தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம் ஒக். 7

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலை மற்றும் உதவி விவசாய விரிவாக்கப்பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றுக்குக் கடந்த வாரம் முதல் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ-7)

## இந்தியாவிலிருந்து வந்த

# பஸ் என்ஜின்களில் ஒன்றேனும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இல்லை

கொழும்பு, ஒக். 7

போக்குவரத்து அமைச்சு இந்தியாவில் இருந்து 500பஸ் என்ஜின்களை இறக்குமதி செய்து சகல மாகாண டிப்போக்களுக்கும் வழங்கியதாயினும் யாழ். மாவட்டத்துக்கு ஓர் என்ஜினும் வழங்கப்படவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் என்ஜின் இல்லாமல் 15 பஸ்கள் கோண்டாவில் சாலையில் நிறுத்தப்பட்டுள்ள போதிலும்—

யாழ்ப்பாணத்துக்கு ஒரு என்ஜின் கூட வழங்காமல் புறக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் சேவைக்கு என்று அனுப்பப்பட்ட 79 பஸ்களில் பலவேறு பிரச்சினைகள் காரணமாக 27 பஸ்களின் என்ஜின்கள் பழுதடைந்துள்ளதாகவும் — திருத்திப்பாவிக்கக் கூடிய நிலையில் அவை இல்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து பெறப்பட்ட 500 என்ஜின்களை சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கும் வைபவம் கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்றது.

(இ-3)

# யாழ். பல்கலைக்கழக புதிய கல்வியாண்டு விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளன.

1996 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கான விரிவுரைகளும் திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளன. இம் மாணவர்களில் கலைப்பீட மாணவர்களுக்கான அறிமுகப் படுத்தல் விழா இன்று புதன்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

அதேசமயம் விவசாய பீட மாணவர்களுக்கும், மருத்துவ பீட மாணவர்களுக்குமான விரிவுரைகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாக உள்ளன.

கல்வியாண்டு விடுமுறையில் உள்ள இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு திங்கட்கிழமையும், மூன்றாம் வருட மாணவர்களுக்கு 20 ஆம் திகதியும் விரிவுரைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6-9)

## வவுனியாவில்

# தொழில்நுட்பக் கல்லூரி வருட இறுதியில் இயங்கும்

திருகோணமலை, ஒக். 7

வவுனியாவில் தொழில்நுட்பக்கல்லூரி ஒன்று வருட இறுதியில் இருந்து இயங்கவிருக்கிறது என்று தொழில்நுட்பக்கல்வி வலயப்பணிப்பாளர் ரீ. ஜெயரத்தினம் தெரிவித்தார்.

வவுனியாவில் அமையவிருக்கும் தொழில் நுட்பக் கல்லூரிக்கான கட்டடம் பூர்த்தி அடையவில்லையாயினும், தற்காலிக கட்டடத்தில் வருட இறுதியில் இயங்கச் செய்ய நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதத்தில் இந்த தொழில்நுட்பக் கல்லூரிக்கு அனுமதி பெற விண்ணப்பங்கள் கோரப்படும் என்றும்—

அடுத்த வருட ஆரம்பத்தில் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

# வாசகர் திருமுகம்

## பயிலுநர் நிரந்தர நியமனம் எப்போது?

1992 ஆம் ஆண்டு செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் 3 வகையான பயிலுநர் ஆசிரியர்கள் நாட்டில் நியமிக்கப்பட்டனர். ஒன்று போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆரம்ப பயிலுநர் ஆசிரியர்கள். மற்றது போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட கணித, விஞ்ஞான பயிலுநர்கள். மூன்றாவது தொண்டர் ஆசிரியராக இருந்து நியமனம் கிடைத்த பயிலுநர் ஆசிரியர்கள்.

இவர்கள் நியமிக்கப்பட்ட போது 4 வருடம் தொடர்ச்சியான சேவை புரிந்த பின் நிரந்தர நியமனம் வழங்கப்படுமெனக் கூறப்பட்டது. பின்னர் தொலைக்கல்வி பகுதி I, பகுதி II என இரு பரீட்சைகளும் சித்தி எய்தி பயிற்றப்பட்ட ஆசிரியரானதும் நிரந்தர நியமனம் வழங்கப்படுமெனக் கூறப்பட்டது. ஆனால் இவ்வாறு நியமனம் பெற்ற 2,500 வரையான ஆசிரியர்கள் தொலைக்கல்வி இறுதிப் பரீட்சையில் சித்தி எய்திய போதும் நிரந்தர நியமனம் வழங்கப்படாத நிலையில் உள்ளனர்.

ஆனால் 1990 மார்ச் மாதம் நியமனம் பெற்ற 35,000 பயிலுநர்களும் 4 வருடம் முடிந்த கையோடு நிரந்தர நியமனம் வழங்கப் பெற்றார்கள். ஏன் இந்தப் பாரபட்சம் காட்டப்படுகின்றதென சம்பந்தப்பட்ட பயிலுநர் ஆசிரியர்கள் அங்கலாய்க்கிறார்கள். அத்துடன் இவர்களில் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு பெற்றவர்கட்கு தற்போதும் 2,000 ரூபா தான் சம்பளம் வழங்குகின்றனர். ஆனால் அண்மையில் நியமனம் பெற்ற தகுதிகாண் ஆசிரியர்கட்கு 2,500 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. வேடிக்கை என்னவென்றால் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக (தொலைக்கல்வி இறுதிப் பரீட்சையும் சித்தி அடைந்தவர்கள்) உள்ளவர்களும் 2 ஆயிரம் தான் சம்பளம் பெறுகின்றார்கள்.

இந்நிலையில் 5 ஆம் மாதம் மாகாணக் கல்வி அமைச்சு கல்விச் சேவை ஆணைக்குழுவின் 10-04-96 ஆம் திகதிய 96/03 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென அறிவித்ததாக தினகரன் பத்திரிகை 06-06-98 இல் தனது முன்பக்க செய்தியாக வெளியிட்டது. எனினும் அவ்வறிவிப்பும் பயனற்ற ஒன்றாகவே இருந்தது.

எனவே இந்நிலையில் சம்பந்தப்பட்ட குடாநாட்டில் உள்ள பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று கூடி இதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானதாகும்.

பொ. நடேசலிங்கம்
(கணித, விஞ்ஞான பயிலுநர் ஆசிரியர்)

எழுதுமட்டுவாள்.

## அல்லற்படும் அரியாலை மக்கள்

கிழக்கு அரியாலை, நாவலடி, மணியந்தோட்ட மக்கள் மீளக்குடியமர்வதற்கு என்று இராணுவ நடவடிக்கை முடிந்த பின்னும் அங்கு பாதுகாப்பு சீரில்லாது மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர். அவர்கள் வேறு இடங்களில் தூரத்திலே வாடகை வீடுகளில் உள்ளனர்.

மாதம் 250 ரூபாவுக்கு மேல் வாடகை செலுத்தியும் வீட்டுக்காரரின் தொல்லையால் மாதம் ஒரு வீடு பார்க்க வேண்டி உள்ளனர். வீட்டு உரிமையாளர்கள் வன்னியில் இருந்து வந்ததும் உடனடியாக வீட்டைவிட்டு வெளியேற வேண்டி உள்ளது. எனவே இந்த நிலையில் உள்ள 300க்கு மேற்பட்ட குடும்பங்கள் வயல், தென்னந் தோட்டத்தையும், கடற்றொழிலையும் நம்பி வாழ்ந்தவர்கள். இன்றோ மர நிழல்களில் தஞ்சமடைய வேண்டி உள்ளது.

இவர்களுக்கு மீளக்குடியமர்ந்தமைக்கான பணம் 5 ஆயிரம் ரூபாவும் கொடுக்கப்படவில்லை. இந்தப் பணத்தைக் கொடுத்தாலும் அவர்கள் சிறு குடிசை அமைத்து வாழ முடியும். இனி மழை காலம் வருவதால் அவர்கள் மேலும் நிறைந்த துன்பங்களை எதிர் நோக்கவேண்டி நேரிடும்.

எனவே இவர்கள் மேல் அக்கறைகொண்டு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களானால் அது பெரிய உதவியாக இருக்குமென எதிர்பார்க்கின்றோம்.

வே. திருநாவுக்கரசு

அரியாலை.

## யா. ப. நோ. கூ. சங்கத்தின் பதில்

கடந்தமாதம் 24ஆம்திகதிய உதயன்பத்திரிகையின் 5 ஆம் பக்கத்திலுள்ள வாசகர் திருமுகத்தில் 'எட்டு வருட காலமாக நீடிக்கும் நிவாரண விநியோகச் சிக்கல்'' என்ற தலையங்கத்தில் வி. கமலாம்பிகை என்பவரது கடிதத்தில் நிவாரண அட்டையைக் கொண்டு யாழ் ப. நோ. கூ. சங்கக் கிளையில் அரிசி கொள்வனவு செய்யச் சென்ற சமயம் "உ'' அட்டைக்கு மட்டும் 05 கிலோ அரிசி வழங்கப்படும் எனக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரண விநியோகம் பெறாத சகல 'அ', 'இ', 'உ' அட்டைதாரருக்கும் இந்த 05 கிலோ அரிசி வழங்கப்பட வேண்டும் எனப் பணிப்புரை விடுத்திருந்தோம். அது பின்பற்றப்படாமல் இருக்கக்கூடும்.

எனினும், இவ்வாறான குறைபாடுகளை சுட்டிக்காட்டுபவர்கள் சம்பந்தப்பட்ட கிளையின் விவரத்தையாவது தெரிவித்தால் தவறுகளைத் திருத்திக் கொள்ளவும், பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் குறைக்கவும் ஏதுவாக இருக்கும்.

மு. சிவப்பிரகாசம்.

பொது முகாமையாளர்,
யா. ப. நோ. கூ. சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா / யூனியன் கல்லூரி

தெல்லிப்பழை (மருதனார்மடம்)

## ஆண்டு 6 அனுமதி - 1999

மேற்படி அனுமதியைப் பெற விரும்புவோர் கல்லூரி அலுவலகத்தில் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர் வரும் 23 – 10 – 98 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

விண்ணப்பதாரிகள் அனுமதிப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

– அதிபர்

(59674)


## மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 23 — 12 — 1919 | 10 — 10 — 1995 |

## நாகமணி பொன்னம்மா

(அன்ரி)

பொல்லாத உலகினிலே எல்லோரையும்
நல்லவரென எண்ணி வாழ்ந்தாயம்மா!
நில்லாது வாழ்வு என்று எங்கள் மீது
நிலையான அன்பு வைத்தாய் அம்மா!
சொல்லாலும் செயலாலும் இறைவழி
நின்றாயம்மா தெய்வமே!
எல்லாம் வல்ல ஈசனடி சேர
பிரார்த்திக்கின்றோம் அம்மா!

உங்கள் நினைவிலிருக்கும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கணேஸ்வரம் வீதி,
குளமங்கால், மல்லாகம்.

(59671)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



நாதஸ்வர இசைமணி

### அமரர் கண்ணுச்சாமி சந்தானகிருஸ்ணன்

மலர்வு 19-07-1929 — உதிர்வு 17-10-1996

திதி: 7-10-1998

அப்பா! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த அந்த நாள் இப்பவும் எங்கள் எல்லோருடைய மனதிலும் ஊசிபோல் குத்துது. எப்படி அப்பா மறப்பது உங்களை? நினைத்து நினைத்து வாழ்நாள் போகட்டும்! அப்பா! நீங்கள் எங்கள் குடும்பத் தெய்வம் அப்பா.

என்றென்றும் உங்கள் நினைவில்,

மனைவி, மக்கள்
மருமகன். பேர்த்தி

இல: 908,
சட்டநாதர் கோயிலடி,
நல்லூர்.

(59649)

## மணல்

ரெணி, ஒக்: 7

நாகர் கோயில கண்ணகை அம்மன் ஆலய சுற்றாடற் பகுதியில் மணல் அள்ளப்பட்டு வருகின்றது. இதனால் அப்பகுதி பள்ளமும் திட்டியுமாகக் காணப்படுகின்றது.

(இ-171)

## விரிவுரைகள் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் பட்டமேற் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கு எதிர் வரும் 10 ஆம் திகதி யாழ். பல்கலைக் கழக கல்வித்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெற இருந்த கல்வி, உளவியல் விரிவுரைகள் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி விரிவுரைகள் அன்றைய தினம் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் என பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

(இ-8)

## நூல் நிலையம் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் யாழ். பிராந்திய நிலையத்திலுள்ள நூல் நிலையத்தை வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் பயன்படுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-8)

## மிளகாய்ச் செய்கை பாதிப்பு

வரணி, ஒக். 7

வடமராட்சி கிழக்குப்பகுதியில் இந்த வருடம் விவசாயிகள் மிளகாய்ச் செய்கையில் அதிகளவு விளைச்சலைப் பெறவில்லை. மிளகாய்ச் செய்கை ஆரம்பித்த நேரத்தில் அதிக மழை பெய்ததால் தமது பயிர் பாதிக்கப்பட்டதாக அப்பகுதி பயிர்ச் செய்கையாளர் தெரிவித்தனர்.

(இ-171)

## கூ. சங்கக்கிளை மூடப்படவுள்ளது

சண்டிலிப்பாய், ஒக். 7

கடந்த சில வருடங்களாக இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சமீபமாகவுள்ள கட்டடத்தில் இயங்கி வரும் அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை இம் மாதம் 12 ஆம் திகதியுடன் மூடப்படவுள்ளது.

தற்போது 66 ஏ, 66 பி ஆகிய புள்ளிகளுக்கு இந்தக் கிளையில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகவும் 11 ஆம் திகதிக்கு முன்பு இதனைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-135)

## ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஒக். 7

திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பயிர்ச்செய்கை தொடர்பாக விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பூச்சி மற்றும் பீடைத்தாக்கங்கள் குறித்தும், அவற்றை நீக்குவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனைகள் இங்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(இ-7)


தரமான முறையில்

## ரி. வி. அன்ரனாக்களை

பொருத்திக்கொள்ள

ரி. வி. நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் பார்க்க
அன்ரனாக்களைப் பொருத்திக்கொள்ள,
பழுதடைந்த அன்ரனாக்கள், ரி.வி. கள்,
டெக், ரேடியோ, மணிக்கூடுகளைத்
திருத்திப் பெற, குறைந்த கட்டணத்தில்
தொலைத்தொடர்பு கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்:

## வீனஸ் டெல்கா

(நாகவிகாரை முன்பாக)

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:

பஸ்நிலையம், சாவகச்சேரி.

(சி/5055)


## 31 ஆம் நாள் அன்பின் நினைவு



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 29 — 09 — 1915 | 07 — 09 — 1998 |

## திருமதி மெலிட்டா ஜோசப்

ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தென்ன
அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தென்ன
"மம்மி" என்றழைக்க நீங்களில்லையே!
அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம் குடும்பத்தின்
ஒளி விளக்காய் எங்களுக்கு அறிவூட்டி
ஆசிதந்து அரவணைத்த தெய்வம் நீங்கள்
எங்கள் அன்புத் தெய்வத்தின்
நினைவுகள் எம்மை வாட்டுகின்றதே
எத்தனை ஆண்டுகள் எப்படிப் போனாலும்
எங்கள் இதயங்களில் உங்கள் நினைவுகள்
என்றும் உயிரோடு இருக்கும்!

பிரிவால் துயருறும்
மகன்மார், மகள்மார்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

8A, புகையிரத நிலைய ஒழுங்கை,
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(59669)

## முதலாண்டில் உங்கள் நினைவில் கலந்து



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 — 04 — 1956 | 17 — 10 — 1997 |

அமரர்

### கனகசபை நடேசன்

(பங்காளர்; யாழ். சிவகணேசன் ஸ்ரோர்ஸ்)

திதி:- 07 – 10 – 1998

உம்மையிங்கு காணாது உருகியாம் அழுகின்றோம்
உங்களது செய்கைகளை எண்ணி நாம் ஏங்குகிறோம்
எம்மையா என்று சொல்லி ஏங்கித் தவிக்கின்றோம்
ஏனெமக்கு இந்தவிதி வந்தொன்றிச் சேர்ந்ததையா?
அம்மையப்ப ராயிருந்த அன்புத் தெய்வமே!
ஆறுதலின்றி உங்களை எண்ணிக் கலங்குகின்றோம்
செம்மையாய் நீங்கள் காட்டிய வழியில் நிற்போம்
செகத்திலென்றும் உங்கள் நினைவுடன் வாழ்வோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்.

23, கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(50687)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குடாநாட்டவர் போக்குவரத்து

பலாலியிலிருந்து இரத்மலானை நோக்கிச்சென்று கொண்டிருந்த 'லயன் ஏயர்' விமான சேவைக்குச் சொந்தமான விமானம், கடலில் வீழ்ந்து மூழ்கி ஒரு வாரம் கழிந்துவிட்டது.

எனினும் குடாநாட்டு மக்களுக்கு இன்னும் மாற்றுப் போக்குவரத்து வசதி எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. விமான சேவைக்கு இப்படி ஒரு கதி ஏற்படும் என்று எதிர்பாராத நிலையில், இங்கிருந்து கொழும்பு சென்ற யாழ்ப்பாண வாசிகள் அங்கும், அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்த கொழும்பு வாசிகள் இங்குமாக, தமது குடும்பங்களுடன் போய்ச் சேரமுடியாமல் அவதிப்படுகிறார்கள்.

இந்த வகையில் இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களும் அங்கு ஆயிரத்துக்கும் அதிகமானோருமாக செய்வதறியாது மனம் உறைந்து போயுள்ளனர்.

மனிதனின் அன்றாட வாழ்க்கை அலுவல்களில், போக்குவரத்து மிகமுக்கிய பங்கு வகிக்கிறது. உள்ளூருக்கேனும், வெளியூருக்கேனும்—வெளி மாவட்டத்துக்கேனும் — போக்குவரத்துச் செய்யாமல்தமது தேவைகளை மக்கள் நிறைவேற்றுவது கடினமானது ஆகையால், மக்களுக்கு உரிய அத்தியாவசிய சேவைகளில் போக்குவரத்தும் ஒன்று. வாழ்வியக்கத்துக்கு அது இன்றியமையாதது.

ஏனைய விவகாரங்களைப் போலவே, குடாநாட்டு மக்களின் போக்குவரத்து வசதியிலும் கொழும்பு அரசு பெரிதாக அக்கறை காட்டவில்லை. விமான சேவைகளை நிறுத்துவதற்கு உத்தரவிட்ட கணத்திலிருந்தே, யாழ். குடாநாட்டு மக்களின்போக்குவரத்துக்கான மாற்று ஏற்பாடு குறித்து அரசு சிந்தித்திருக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து போக்குவரத்துக்கான வசதிகளைச் செய்திருக்க வேண்டும்.

ஆனால், பயணிகள் கப்பல் சேவை ஒன்றை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று யாழ். அதிபர் கேட்கும் வரை கொழும்புப் பக்கம் அசமந்தமாகவே இருந்தது. அதன் பின்னரும் பயணிகள் கப்பல் சேவை சம்பந்தமாக துரிதமாகச் செயற்படுவதாக இல்லை. குடாநாட்டு மக்களின் கொழும்புக்கான போக்குவரத்தை இலகுவாக்குவதற்காகவே 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையைத் தொடர்வதாகக் கூறும் அரசு —

போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள இப்போதைய தடங்கலை நீக்குவதில் அக்கறை கொள்ளவில்லை!

யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்து ஏற்பாடு ஒன்றைச் செய்வதில் போதிய அக்கறையின்றி ஏனோ தானோ போக்கை — அணுகுமுறையை — அரசு கடைப்பிடிப்பது ஏனோ?

குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடைபெறுவதாக அரசு கூறுவது அர்த்தமுள்ளதாக வேண்டுமெனில், மாற்றுப் போக்குவரத்து ஏற்பாடு உடனடியாகச் செய்யப்பட வேண்டும். அரசு கவனிக்குமா?

# மின்சார, தொலைபேசி சேவைகள் தேவையான இலக்குகளை எட்டாததால் மக்கள் அதிருப்தி

## நடந்ததும் நடவாததும்-8

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட மீளக்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுத்திட்டங்கள், செயல் முறைகள் குறித்த கண்ணோட்டம் ஒன்றை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அண்மையில் அறிக்கை வடிவத்தில் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மக்கள் நலன் — வசதி— கருதி நடந்ததும் நடைபெறாததும் குறித்துப் புள்ளிவிவரங்களுடன் விலாவாரியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கண்ணோட்ட அறிக்கை உதயனில் பகுதி பகுதியாக அவ்வப்போது வெளிவரும்.

மனித வாழ்வுக்குத் தேவைப்படும் அடிப்படைத் தேவைகளில்வதிவிடமும் ஒன்றாகும். இங்கு நடந்த அனர்த்தங்களினால் பரந்த அளவில் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. வீடுகளுக்குப் பாரிய சேதங்களும் ஏற்பட்டுள்ளன. சுமார் 91,000 வீடுகள் அழிக்கப்பட்டோ அல்லது பாதிக்கப்பட்டோ உள்ளதாக அறியக் கூடியதாக உள்ளது. ஒரு வீடு கட்டுவதற்கு சராசரி 5 இலட்சம் ரூபாவில் இருந்து பத்து இலட்சம் ரூபா வரை செலவாகும். யாழ்ப்பாண மக்களில் பெரும்பாலானோர் தங்கள் முழு சேமிப்பையும் முதலீடு செய்து, அத்துடன் வீடமைப்பு அதிகார சபை மற்றும் வங்கிகளில் கடன் பெற்றும் தங்கள்சந்ததி சந்ததியாகப்பராமரிக்கும் நோக்குடன் ஒரு காத்திரமான வீட்டைக் கட்டுவார்கள். ஆகவே அழிக்கப்பட்ட, சேதமாக்கப்பட்ட வீடுகளுக்குப் போதியளவு நஷ்டஈடு வழங்குவது அரசாங்கத்தின் கடமையாகும்.

வீட்டுப் பொருள்களின் பெறுமதிகள் மேற்கூறிய மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை. அவைகள் வீட்டின் பெறுமதிக்கு நிகராகவாம்.

பல வதிவிடங்களில் வீடுகள் தும்பலாக அழிக்கப்பட்டுள்ளன. இதனால எல்லைகளைக்கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது. கிணறுகளோ மூடுண்டுள்ளன. இவ்வாறான நிலைமைகள் விசேட கவனத்திற்குரியவையாக உள்ளன.

### நஷ்ட ஈடாக ரூபா 25,000

அழிந்த வீடுகளுக்காக அரசாங்கம் 25,000 ரூபா நஷ்டஈடு வழங்கும் ஒரு பிரேரணை வைத்திருப்பதாக நாங்கள் அறிகின்றோம். பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும், இது வெளி உலகத்தை ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சி எனவும் உணருகிறார்கள். ஆகவே நியாயமானதும், பாதிப்புற்ற மக்களுக்கு ஏற்புடையதாகவும் ஒரு நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

### மின்சாரம்

ஒரு குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் மின்சாரம் வழங்கப்படும் என்ற உறுதிமொழி இலங்கை மின்சார சபையினால் நிறைவேற்றப்படவில்லை. தற்போதைய மின் விநியோகம் ஒரு கேலிக்கூத்தென்றே வர்ணிக்க முடியும். 1990 -க்கு முன்னர் மின்சாரம் வழங்கப்பட்டிருந்த 77,000 வீடுகளில் தற்போது ஆக 16,000 வீடுகள் வரையிலேயே மின் தொடர்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டின் முக்கியமான வதிவிடங்களில் சுமார் 16 சிறிய டீசல் ஜெனரேற்றர்கள் நிறுவப்பட்டுள்ளன. பிரித்தானியத் திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 250 கே.வி.ஏ. கொண்ட எட்டுஜெனரேற்றர்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள வரையறுக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவீடுகளுக்கேமின்சாரம் வழக்கப்பட்டுள்ளது. மின் விநியோகம் 3 பொயின்ற்ஸ் என வீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது இரவில் சில மணித்தியாலங்களுக்கு அதுவும் சாதாரணமாக ஒன்று விட்ட நாள்களிலேயே வழங்கப்படுகிறது. புதிய ஜெனரேற்றர்கள் தடங்கல் இல்லாமல் இயங்குகின்றன. ஆனால் பழையவை அடிக்கடி பழுதடைகின்றன.

குடாநாட்டின் மின்சாரத் தேவை சுமார் 20 மெகா வோட்ஸ் என மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுது நிறுவப்பட்டுள்ள சக்தி 3.5 மெகா வோட்ஸ் மட்டுமே ஆகும்.

விவசாயம், சிறிய தர தொழில்களின் அபிவிருத்திக்கு மின்சார மயமாக்குதல் அவசர தேவையாகும்.

### தொலைத்தொடர்பு

1980 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இயங்கு நிலையில் சுமார் 3,000 தொலைத்தொடர்பு இணைப்புகள் இருந்தன. தற்போதைய புனர்வாழ்வுத்திட்டம் 1,000 பாவனையாளர்களுக்கு (பொது இடத்தொலைத்தொடர்பு நிலையங்கள் உட்பட) தொலைத் தொடர்பு வசதி வழங்குவதையே இலக்காகக் கொண்டிருந்தது. ஆனால் 300 பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்த 300 பயனாளிகளையும் தெரிவு செய்வதற்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகள் மேல் ஏனைய விண்ணப்பதாரர்கள் பாரதூரமான முறைப்பாடுகள் செய்துள்ளார்கள். தொலைத்தொடர்பு இணைப்பு கம்பிகள் பற்றாக்குறை காரணமாக அதிகாரிகள் தேவைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் உள்ளனர் என்று அறியப்படுகிறது.

### அஞ்சல் சேவை

இரண்டுவருடங்கள் கழிந்தபோதிலும் அஞ்சல் சேவை திருப்திகரமான நிலைக்குத் திரும்பவில்லை; முத்திரை தட்டுப்பாடு, கொழும்பில் இருந்து உள்வருகின்ற,வெளிச்செல்லுகின்ற கடிதங்களில் கணிசமான தாமதம், குடாநாட்டுக்குள் கடிதங்கள் விநியோகத்தில் தாமதம் போன்ற பல வகையான பிரச்சினைகளுக்குச் சென்ற இரு வருடங்களாக மக்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட தபாலகக் கட்டடங்கள் புனருத்தாரணம் செய்யப்படவில்லை. பணிகளைச் செய்வதற்குப் போதுமான தளபாடங்கள், உபகரணங்கள் முழுமையாக மீள வழங்கப்படவில்லை.

★

# ஆசிரியரின்பிரச்சினைகளை தீர்த்தால் சுமுகமான கல்விச் சூழல் உருவாகும்

## வலயம் - 1 இன் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

'ஆசிரியர்களின் பிரச்சினைகள் அலுவலக மட்டத்திலே தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயற்படுவேன். பிரச்சினைகளை நீடிக்கவிடாமல் தீர்ப்பதால் சுமுகமான கல்விச் சூழலை உருவாக்க முடியும்.

இப்படி யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கல்விப்பணிப்பாளராகப் பதவியேற்ற பின் எமது செய்தியாளரிடம பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இச் சந்திப்பின் போது அவர்மேலும் கூறியதாவது—

தொழிற் பிரச்சினைகள் சம்பந்தமாக என்னை வீட்டில் வந்து எவர் சந்திப்பதையும் நான் விரும்பவில்லை. பிரச்சினைகள் யாவும் அலுவலக மட்டத்தில் தீர்க்கப்படுவதையே நான் விரும்புகின்றேன்.

ஆசிரியர் அர்ப்பணிப்பு, சேவை மனப்பான்மையுடன் செயற்படவேண்டும. கல்வியை வியாபாரமாக்கக் கூடாது. எனவே தங்களுக்குரிய பொறுப்பை உணர்ந்து ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டும்.

ஆசிரியர்களுடைய நலன்கள் பேணப்படவேண்டும். அவர்கள் சிறப்பாக இருந்தால் தான் மாணவர்களுக்கு சிறந்த கல்வியை ஊட்ட முடியும். ஆசிரியர்கள் மனது மலர் போன்றது அதனை கருக வைக்கக் கூடாது.

மாணவர்களிடையில் மனித விழுமியங்களைப் பேணத்தக்க வகையில் ஆசிரியர்கள் செயற்படவேண்டும்— என்றார்.

(இ-5)

### மருதங்கேணியில்

# சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

செம்பியன்பற்று, ஒக். 7

வடமராட்சி அம்பன் பகுதியில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவும், மருதங்கேணிக் கல்விக் கோட்டமும் இணைந்து நடத்திய சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நிர்வாக உத்தியோகத்தர் இ. சிவபுண்ணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுகளில் மருதங்கேணிக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம், பருத்தித்துறை பிரதேச சபைச் செயலர் எஸ். நடராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுகளில் சிறுவர்களுக்கான போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்கியதுடன், முதியோர்களை மகிழ்விக்கும் வகையில் அவர்களுக்கான உடுபுடைவைகள் போன்ற பரிசில்களும் வழங்கப்பட்டன.

(இ-36)

## நாளை

புரட்டாதி - 22

வியாழக்கிழமை

திதி: திருதியை

முன்னிரவு: 07.11 வரை.

நட்சத்திரம்: பரணி

முன்னிரவு 06.53 வரை.

கார்த்திகை விரதம்

சுபநேரம்: 07.32 - 09.02

ராகுகாலம்: 1.32 - 3.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

துயரத்திலிருந்து சக்தியைச் சேகரிப்பவனை நான் அன்புடன் பாராட்டுகிறேன்.

# மாடுகளுக்கு நோய் தடுப்பு மருந்து

வலி. தென்மேற்கு, ஒக். 7

மாடுகளுக்கு ஏற்படும் புதுவித நோயைக் கட்டுப்படுத்த "எச். எஸ்." ஊசி மருந்து ஏற்ற சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எச். எஸ். ஊசி மருந்து ஏற்ற விரும்பும் கால்நடை உரிமையாளர் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் உள்ள நவாலியில் எச். எஸ். ஊசி மருந்து போட விரும்புவோர் கால்நடை உரிமையாளர் சு. மோகனமுரளியுடன் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

(இ-85)

# மோசமான நிலையில் வீதி

மட்டுவில் வடக்கு கனகன் புளியடிச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி புத்தூர்ச் சந்திவரை செல்லும் வீதியில் கனகன் புளியடியிலிருந்து வண்ணாத்திப்பாலம் வரையான சுமார் 3 கிலோ மீற்றர் நீளமான வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இந்த வீதியைத் திருத்துவதற்காக இரு மருங்கிலும் கல் பறிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை வீதி திருத்தப்படவில்லை.

கடந்த பங்குனித் திங்கள் உற்சவத்தின் போது மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு இந்த வீதி வழியாகச் சென்றவர்கள் விபத்துக்களை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

(இ-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வடக்கில் தேசியக் கொடி ஏற்றுவதற்காக

# தென்னிலங்கையின் பலபகுதிகளிலும் வெள்ளைக் கொடி தொங்கும் நிலை

### மட்டக்களப்பு மாவட்ட எம். பி. கூறுகிறார்

மட்டக்களப்பு, ஒக். 7

சொந்த நாட்டிலே— வட பகுதியின் ஒரு பிரதேசத்தில் —தேசியக் கொடியை ஏற்றுவதற்காகத் தென்னிலங்கையின் சகல பகுதிகளிலும் வெள்ளைக் கொடிகளைத் தொங்கவிடும் நிலையே இன்று காணப்படுகிறது. நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சமாதானத்தை விரும்புகின்ற போதிலும் அரசாங்கம் மாத்திரம் யுத்தத்தைத் தொடர முனைகிறது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா மேற்கண்டவாறு கூறினார்:-

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசத்தில் ஐ. தே. கவின் கொத்தணி அமைப்பாளர்களை நியமிப்பது தொடர்பான கூட்டம் ஏறாவூரிலுள்ள மேற்படி கட்சியின் காரியாலயத்தில் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கூறியதாவது:-

எமது மக்களின் மத்தியிலுள்ள அடி மட்டப் பிரச்சினைகளை இனங்கண்டு, பட்டியலிட்டு தலைமைப் பீடத்துக்குத் தெரியப்படுத்தித் தீர்வு காண்பதே இந்தக் கொத்தணி அமைப்புகளின் நோக்கம். மாறி மாறி வரும் அரசுகள் அநீதி இழைத்துக் கொண்டிருந்தால் நாம் தொடர்ந்து தலை சாய்த்துக் கொண்டிருக்க முடியாது.

இன்று அரசியல்வாதிக்குப் பணம் கொடுக்காது எந்தவொரு தொழில் வாய்ப்பினையும் பெறமுடியாதுள்ளது.

அண்மையில் கடல் கடந்த நிர்வாக சேவையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டோரில் தமிழ்பேசும் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும் இடம் பெறாதது எமது மக்கள் புறக்கணிக்கப்படுவதை வெளிப்படையாகக் காட்டுகின்றது.

இப்படி அவர் கூறினார்.

### வினாத்தாள் விவகாரம்

## கல்முனை மாணவர்கள் இன்று பகிஷ்கரிப்பர்

கொழும்பு, ஒக். 7

அக்கரைப்பற்றில் ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை வினாத்தாள்கள் வெளியான விவகாரம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் இன்று புதன்கிழமை பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

பரீட்சை வினாத்தாள்கள் முன் கூட்டியே வெளியானதால் இந்தப் பரீட்சையை ரத்துச் செய்து விட்டு மீண்டும் சகல பாடங்களுக்கும் புதிதாகப் பரீட்சை நடத்த வேண்டும்:—

இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள், முறைகேடுகளுக்கு காரணமானவர்கள், அதிகாரதுஷ்பிரயோகத்துக்குக் காரணமானவர்கள் ஆகியோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்—

ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பகிஷ்கரிப்பு நடத்தப்படவுள்ளது.

கல்முனை அக்கரைப்பற்று நிந்தவூர், சம்மாந்துறைப் பகுதிகளில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பகிஷ்கரிப்பின் பின்னரும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவது எனவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை—

இந்த விவகாரம் பற்றி விசாரித்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் முழு அறிக்கையும் கிடைத்த பின்னர் பரீட்சையை மீண்டும் நடத்துவது பற்றி முடிவு செய்யப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ஐ-21-164-9)

## யூரியா கையிருப்பில்

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் பெறக்கூடிய அளவில் யூரியா உரம் கையிருப்பில் உள்ளது. என யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார்.

### லயன் ஏயர் சம்பவம்

## அனுதாபம் தெரிவித்து புளொட் அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 7

லயன் ஏயர் விமானம் விழுந்ததில் உயிரிழந்த பொதுமக்கள் அனைவருக்கும் அஞ்சலி தெரிவித்து புளொட் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கையின் விவரம் வருமாறு—

கடந்த 29-09-98 அன்று பலாலியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணமான லயன் ஏயர் விமானத்தில் பயணஞ் செய்த 48 பயணிகளும் மற்றும் விமான ஓட்டி உட்பட 7 விமானப் பணியாளர்களும் மன்னார்க் கடலில் விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் அநியாயமான முறையில் உயிர் நீத்தனர்.

விமானத்தை விடுதலைப் புலியினரே தாக்கி இருக்க வேண்டும் என்கின்ற சந்தேகமே அனைத்து வட்டாரங்களிலும் ஊர்ஜிதமாகின்றது.

இது விடயமாக விடுதலைப் புலிகளை வன்மையாகக் கண்டித்து நாம் ஏற்கனவே விடுத்த அறிக்கையை ஒரு பத்திரிகை தவிர்ந்த ஏனைய பத்திரிகைகள் வெளியிடத் தவறிவிட்டன.

மேலும் இந்த விமானத்தில் உயிர்ப்பலியான பொதுமக்கள் மற்றும் விமான ஓட்டிகள், பணியாளர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்வதுடன்— நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எந்தக் கட்சியும் இதுவரை எந்தவிதமான கண்டனத்தையோ அல்லது கடலில் அநாதரவாக மிதந்து கொண்டிருக்கும் சடலங்களை மீட்பதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான வேலைத்திட்டத்தையோ மேற்கொள்ளாததையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகிறோம்.

அத்துடன் புலிகள் இந்த விடயத்தில் மனிதாபிமான மற்ற முறையில் நடந்து கொண்டமை தமிழ் பேசும் மக்கள் மீது அவர்கள் வைத்துள்ள அக்கறையும் பற்றுதலும் எந்த அளவிற்கு இருக்கின்றது என்பது மன்னார்க் கரையோரக் கடற்பகுதியில் அநாதரவாக மிதக்கும் தமிழ்ப் பயணிகளின் சடலங்கள் கவனிப்பாரற்ற நிலையில் கிடப்பதில் இருந்து தெரியவருகின்றது.

தமிழ் பேசும் மக்களை அரசியல் சதுரங்கத்தின் பகடைக்காய்களாக பலிக்கடாவாக்கி யுத்தம் புரிகின்ற எந்தவோர் அமைப்போ, இயக்கமோ இது வரையில் வெற்றிகண்ட வரலாறு இல்லை என்பது தான் வரலாறுகள் கூறும் யதார்த்தமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு என்னும் பெயரில் யாழ். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேச மக்களுக்கு என்ற பெயரில் விடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் பொதுமக்களை விமானப் போக்குவரத்தைத் தவிர்க்கும்படியும், கப்பல் மூலம் பயணம் மேற்கொள்ளும் படியும் குறிப்பிடப்பட்டதிலிருந்து புலிகள் தான் விமானத்தைத் தாக்கியிருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

எமது மக்களின் மன உணர்வை, எண்ணங்களை, எதிர்பார்ப்பைச் சரியாக அலசி ஆராய்ந்து புரிந்து கொள்ளாமல் செயற்படுவதனால் இவ்வாறான அப்பாவிப் பொதுமக்களின் உயிர்கள் எந்த விதமான பெறுமதியுமில்லாமல் அழிக்கப்படுவது தவிர்க்க முடியாமற் போய் விடுகின்றது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## மழை, வெப்ப கணிப்பு; பார்வையிட வசதி

யாழ்ப்பாணம்; ஒக்: 7

யாழ்ப்பாணத்தில் தற்போது பெய்து வரும் மழையின் அளவு மற்றும் நாளாந்த வெப்ப நிலை அளவுக் கணிப்புகளை திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பார்வையிடலாம் என்று ஆராய்ச்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி எம். செல்வராஜா தெரிவித்தார்.

போதிய உபகரணங்கள் இன்மையால் மழை வீழ்ச்சி மற்றும் வெப்பநிலை பற்றிய அளவுகளை மதிப்பிட முடியாத நிலை கடந்த காலங்களில் இருந்து வந்தது.

தற்போது கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட ஒரு சில கருவிகளைக் கொண்டு மழை வீழ்ச்சி மற்றும் வெப்ப நிலை அளவுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றதெனவும் —

மழை வீழ்ச்சி, வெப்ப நிலை அளவுகளைப் பார்வையிட விரும்புவோர் தினந்தோறும் காலை 8-30 மணிக்கு முதல் நாள் கிடைக்கப் பெற்ற மழை, வெப்ப அளவுகளைப் பார்வையிடலாம் என்றும் —

யாழ். பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு விவசாய விஞ்ஞானம் பற்றிய செயல்முறைக் கல்வியை வழங்கும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் — விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(இ-7)


## கண்ணீர் அஞ்சலி

1998 - 09 - 29ஆம் திகதியன்று இடம்பெற்ற விமான விபத்தில் அகால மரணமடைந்த எமது திணைக்கள உத்தியோகத்தர்

திருமதி

**சித்திரா இரகுநாதன்**

(கூட்டுறவுப் பரிசோதகர், யாழ்ப்பாணம்)

அவர்களுக்கும்,

அவரது கணவர்

அமரர்

**குமாரசாமி இரகுநாதன்**

அவர்களுக்கும்

எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன், துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள்,
நலன்புரிக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள்,
கூட்டுறவு அலுவலர்கள்,
யாழ்ப்பாணம்.

(சி-5105)



### வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை கரவெட்டி

## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் 15—10—98 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு பிற்பகல் 2-00 மணியளவில் கேள்விச் சபையால் திறக்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களே கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

கேள்விப் பத்திரங்களை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை தலைமைச் செயலகத்தில் 13—10—98 ஆம் திகதி பிற்பகல் 1-00 மணி வரை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 01. முடக்காடு வீதி | ரூ. 250/- | ரூ. 1500/- |
| 02. மாதா கோயில் வீதி | ரூ. 250/- | ரூ. 1000/- |
| 03. கம்பர் மலை வைரவர் கோயில் வீதி | ரூ. 250/- | ரூ. 1000/- |
| 04. வல்வெட்டி பாடசாலை வீதி | ரூ. 250/- | ரூ. 1000/- |
| 05. விண்ணன் வீதி | ரூ 250/- | ரூ. 1000/- |
| 06. மத்தொனி ஆலடி வீதி | ரூ. 250/- | ரூ. 1000/- |
| 07. வதிரி மெதடிஸ்த பாடசாலை வீதி | ரூ. 250/- | ரூ. 1000/- |
| 08. உச்சில் அம்மன் கோயில் வீனஸ் சுற்றுவட்ட வீதி | ரூ. 250/- | ரூ. 1000/- |
| 09. கொற்றாவத்தை எலுப்பிட்டி வீதி | ரூ. 250/- | ரூ. 1000/- |
| 10. சரஸ்வதி வித்தியாலய வீதி | ரூ 250/- | ரூ. 1000/- |
| 11. கட்டைவேலிஉப அலுவலகத்திருத்தம் | ரூ. 250/- | ரூ. 1000/- |

மேலதிக விவரங்களை இப்பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் வேலை நாள்களில் அறிந்து கொள்ளலாம்.

செல்லையா சுந்தரமூர்த்தி
தலைவர்
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

02—10—1998

(சி/ 5104)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுள் ஊடுருவ புலிகள் திட்டம் தயாரிக்கின்றனராம்!

கொழும்பு, ஒக். 7

குடாநாட்டிற்குள் ஊடுருவுவதற்கான போர்த்திட்டங்களை விடுதலைப் புலிகள் தயாரித்து வருகின்றனர் என கொழும்பிலிருந்து வெளியாகும் "திவயின" நாளிதழ் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அந்தத் திட்டத்தின்படி — முதற் கட்டமாக கிளிநொச்சிக்கு அண்மையாக அமைந்துள்ள யாழ். குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதிக்குள் ஊடுருவதற்கான பொருத்தமான சூழ்நிலைகளை உருவாக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் என அந்தப் பத்திரிகை கூறுகின்றது.

இதற்கிடையில் மட்டுவில் பகுதி மக்களை வடமராட்சிப் பகுதிக்குச் செல்லுமாறும் மந்துவில் பகுதி மக்களை வலிகாமம் பகுதிக்குச் செல்லுமாறும் கூறும் சுவரொட்டிகள் அப்பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன என வெளியான தகவல்களும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(உ-10)

# சாந்தி, சமாதானம் வேண்டி 45 நாள் ஆன்மீக சாதனை

## வீடுகளில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஒக். 7

இலங்கையில் அனைத்து மக்களும் சாந்தியுடனும், சமாதானத்துடனும் வாழ வேண்டி வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு 45 நாள்கள் தொடர்ச்சியான ஆன்மீக சாதனையை நிலைநாட்ட ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

அனைத்து மக்களும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் நவம்பர் 22 ஆம் திகதி வரை தத்தமது இல்லங்களில் தினமும் மாலை 7-30 மணிமுதல் 8-00 மணிவரை (புதியநேரம்) தமது பிரார்த்தனை அறைகளில் தாம் வணங்கும் கடவுளை வேண்டி எல்லாரும் இன்புற்றுவாழப் பிரார்த்திக்கலாம்.

மாலை 7-30 மணிக்கு குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் கூடியிருந்து 3 முறை ஓங்காரம் செய்து அதனைத் தொடர்ந்து 7-50 மணிவரை தாம் விரும்பியவாறு திருமுறைகள், பஜனை நாமஜெபம், புனிதநூல்கள் வாசித்தல், காயத்திரி மந்திர உச்சாடனம் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

சரியாக 20 நிமிடங்களுக்குப் பின்னர் 8 மணிவரை தியானம் செய்ய வேண்டும். இதில் "ஜோதி தியானம்" செய்வதும் விரும்பத்தக்கது.

அனைத்து மக்களினதும் சாந்தி, சமாதானம் வேண்டி அனைவரும் ஒன்றுகூடிப் பிரார்த்தனையில் ஈடுபட இருப்பதால் இது நல்ல பயனை அளிக்கும் - என்று இணைப்புக்குழு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோதி தியானம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதனை விளக்கி வடபிராந்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

(அ-8)

## மயக்க மருந்து தட்டுப்பாடு

# யாழ். ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். ஆஸ்பத்திரியில் நிலவும் மயக்க மருந்துத் தட்டுப்பாட்டால் அவசர சத்திர சிகிச்சைகளே நேற்று முதல் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ். போதனாவைத்திய சாலையில் தற்போது சில முக்கிய மருந்து வகைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் பல நோயாளர்கள் தகுந்த சிகிச்சையை உரிய நேரத்தில் பெறமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக் களத்திலும் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சத்திரசிகிச்சையின்போது நோயாளியை மயக்கமடையச் செய்வதற்கு பாவிக்கப்படும் ஸ்கோலின் என்று அழைக்கப்படும் சக்ஸமெதோனியம் க்ளோரைட் என்ற ஊசிமருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் சத்திரசிகிச்சை செய்யும் நோயாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முதல் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த மட்டுப்படுத்தல் நடவடிக்கைக் கமைய மிக அவசர நோயாளர்களுக்கு மாத்திரமே சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

(உ-15)

# பஸ்ஸிலிருந்து வீழ்ந்து காயம்

ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸில் இருந்து விழுந்து பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

கோண்டாவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த புஷ்பநாதன் செல்வமனோகரி (வயது 45) படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-15)

# அமுத விழா

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் எண்பதாவது ஆண்டு நிறைவையொட்டிய அமுத விழா இன்று காலை 9 00 மணிக்கு அதிபர் சு. செகசோதிநாதன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

(உ-31-117)

# முன்கூட்டியே ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஒக். 7

முதியோர் தினத்தை ஒட்டி அரச ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு ஒரு வாரம் முன்பாக — இன்று — வழங்கப்படவுள்ளது.

ஓய்வூதியர்கள் தத்தமது வங்கிகளுக்குச் சென்று இன்று ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் மாதம் 13 ஆம் திகதி ஓய்வூதியங்கள் வழங்க முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

(உ-7-5)

# யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

காலம்: 17.10 1998 சனிக்கிழமை

நேரம்: பிற்பகல் 3-00 மணி

இடம்: பாடசாலை மண்டபம்

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய அறிவித்தல்

1980 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை எமது பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய சகல மாணவர்களையும் 10-10-1998 அல்லது 11 10-1998 அன்று அதிபர் சந்திக்க விரும்புகிறார்.

திருமதி யூலியற்யேசுதாசன்
(உபசெயலாளர்)
பழைய மாணவர் சங்கம்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

(59703)

# மெய்வன்மை போட்டி

தென்மராட்சி, ஒக். 7

கொடிகாமம் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் மிருசுவில், தவசிகுளம் பாலர் பாடசாலை சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சென். மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் க. செல்வகுமார் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக கொடிகாமம் திருநாவுக்கரசு மாகாவித்தியாலய அதிபர் க. கந்தையாவும், கௌரவ விருந்தினர்களாக தவசிகுளம் றோ. க. பாடசாலை அதிபர் நீ. ம. ஜெயசிங், கொடிகாமம் ப. தெ. வ. அ. கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் கா. மணியம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(உ-117)

# கப்பல் மூலம் தபால்கள் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 7

குடாநாட்டிலிருந்து வெளி இடங்களுக்கான தபால்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலமே அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன.

எதிர்வரும் 9 ஆம், 13 ஆம், 16 ஆம், 21 ஆம், 28 ஆம் திகதிகளில் இச்சேவை இடம்பெற இருப்பதால் தபால்களை அத்தினங்களுக்கு முன்னர் தபாற்பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபால் அதிபர் சு. கோடீஸ்வரன் மக்களைக் கேட்டுள்ளார்.

(உ-3-4)

# மரண அறிவித்தல்

கவிஞர்

## க. இ. சரவணமுத்து (சாரதா)

(முன்னாள் ஆசிரியர்,
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை

உரும்பிராய் தெற்கு ஆசிரியர் க. இ. சரவணமுத்து அவர்கள் 03-10-1998 சனிக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

இவர் கோப்பாய் வடக்கு இளையதம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வரும், உரும்பிராய் தெற்கு பொன்னையா தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், உரும்பிராய் காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி சரவணமுத்துவின் (ஓய்வு பெற்ற அதிபர், உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை) அன்புக் கணவரும், சாரதாதேவி (லண்டன்), பாரதிதேவி (ஆஸ்திரேலியா), மகேசன் (லண்டன்), வாணிதேவி (ஆஸ்திரேலியா), சபேசன் (லண்டன்), கலாதேவி (லண்டன்), வித்தியாதேவி (ஆஸ்திரேலியா), சாந்திதேவி (கொழும்பு) ஆகியோரின் தகப்பனாரும், தயாளன் (ஆஸ்திரேலியா), பிருந்தா (லண்டன்), அநந்தநாதன் (ஆஸ்திரேலியா), விக்னராஜா (லண்டன்), சிவகுமார் (ஆஸ்திரேலியா) சித்தாமோகன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், சுருதி வீணா, திருவேணி, பிரணவன், சரவணன் ஆகியோரின் பேரனாரும், ஓய்வுபெற்ற அதிபர் க. இ. குமாரசாமி (கோப்பாய்), காலஞ்சென்றவர்களான திருமதி சிவக்கொழுந்து கதிரவேலு, ஆசிரியர் சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற மீனாட்சி, அமிர்தமலர், இராஜேஸ்வரி, தருமலிங்கம், துரைராசா, துதிமலர், விக்கினேஸ்வரன், இந்திரதாஸ், காசிலிங்கம் (மாவட்டப் பதிவகம் செயலகம், யாழ்ப்பாணம்), அற்புதராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 08-10-1998 வியாழக்கிழமை பகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணிக்கு கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. இ. குமாரசாமியும்
பொ. காசிலிங்கமும்

91/45, வறுத்தப்பொல வீதி,
கல்கிசை.

"மகேஸ்வரம்"
உரும்பிராய்.

[59705]

# வாழ்த்துகின்றோம்

வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளராக பதவியேற்ற

## உயர்திரு. சி. சிவராசா

அவர்களை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வ. செல்வராசா
(கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி)

ஆ. க. நடராசா
(உத்தியோகப் பற்றற்ற நீதிவான்)

வ. கணேசமூர்த்தி
(அதிபர்)

கா. ராமஜெயம்
(ஆசிரியர்)

சசி. சிவப்பிரகாசம்
(அம்சன் ஒளியகம்)

(சி/5109)


# மலிவு விற்பனை

தெரிவுக்கு முந்துங்கள்

**தீபாவளித் திருநாளை முன்னிட்டு 06-10-98 முதல் 19-10-98 வரை**

எமது ஸ்தாபனத்தில் மலிவு விற்பனை நடைபெறுமென்பதை அன்பான வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

## ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

இல. 13,14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(59707)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சியில் கொல்லப்பட்ட

# படையினருக்கு அஞ்சலி செலுத்தும் பிரேரணையை ஏற்பதற்கு மறுப்பு!

கொழும்பு, ஒக். 7

கிளிநொச்சியில் கொல்லப்பட்ட படையினருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாடாளுமன்றத்தில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட வேண்டும் என்று ஐ. தே. கட்சி உறுப்பினர் சமர்ப்பித்த பிரேரணையைச் சபாநாயகர் கே. பி. இரத்தி நாயக்கா நேற்று நிராகரித்தார்.

ஐ. தே. கட்சி செயலாளர் காமினி அத்துகோறள இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்தபோது இந்தப் பிரேரணை அரசியல் நோக்கம் கருதிக் கொண்டுவரப்படுகின்றது என்றும் —

இவ்வாறான சம்பவத்துக்கு ஐ. தே. கட்சி முன்னர் ஒரு போதும் மௌனம் அனுஷ்டிக்கவில்லை என்றும் —

சபாநாயகர் தெரிவித்தார்

### இரணைதீவுக் கடற்பகுதியில்

# விமானம் வீழ்ந்த இடத்துக்கு வார இறுதியில் குழு செல்லும்

இரணைதீவுக் கடற்பகுதியில் வீழ்ந்த 'லயன் ஏயர்' விமானத்தின் பாகங்களையும், சடலங்களையும் மீட்கச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் குழுவொன்று வார இறுதியில் அங்கு செல்லவிருக்கிறது.

இது தொடர்பான ஏற்பாடுகள் குறித்து மன்னாரில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரி மன்னார் அரச அதிபர் எஸ். எம். குறூஸுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

அந்தப் பிரதேசத்துக்குச் செல்லவிருக்கும் வள்ளத்தின் நிறம், அதன் அமைப்பு போன்ற விவரங்களைத் தருமாறு அவர் அரச அதிபரிடம் கேட்டுள்ளார்.

கடற்படையினருடனும், விடுதலைப் புலிகளுடனும் பேசி அனுமதி பெற்ற பின்னர் பெரும்பாலும் வார இறுதியில் குழு அங்கு செல்லும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவில் 'லயன் ஏயர்' விமான நிறுவன அதிகாரிகள் இறந்தவர்களின் ஒரு சில உறவினர்களும் இடம்பெறுவர்.

இக்குழு சென்று திரும்பிய பின்னர் இறந்தவர்களின் உறவினர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டுப் பிரார்த்தனை செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்று அரச அதிபர் எஸ். எம். குறூஸ் தெரிவித்தார்.

அதேவேளை — இறந்தவர்களின் உறவினர்கள் பலர் மன்னார் வந்துள்ளதாகவும் —

விவரம் அறிய அவர்கள் அலைந்து திரிவதாகவும் —

மன்னார் தகவல்கள் தெரிவித்தன. (உ-3-164)

## ஸ்ரீ.ஐ. முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆராய்ந்து இறுதி முடிவெடுப்பார் என ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சியின் மூத்த பிரமுகர்களுடன் இன்று அல்லது நாளை இது குறித்து அவர் ஆலோசனை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

"பதினைந்து வருட யுத்தத்தில் அரசுப் படைகளுக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ள இந்தக் காலகட்டத்தில் ஜனாதிபதி நாட்டில் இல்லாமல் தனிப்பட்ட முறையில் வெளிநாட்டுச் சுற்றுலா சென்றுள்ளமை பெரிய துரதிர்ஷ்டம்" — என்று ஐ. தே. கவின் பொதுச் செயலாளர் காமினி அத்துக் கோறளை தெரிவித்துள்ளார். (உ-10-21)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்)

மாவட்டத் தலைநகர்களில் நடைபெறும் இப்போராட்டத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்சிகளும் தமிழர் அமைப்புகளும் பங்குகொள்ளும் என்றும் —

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கொடும்பாவிகள் இந்தப் பேராட்டத்தின் போது எரிக்கப்படும் என்றும் —

பழ. நெடுமாறன் அறிவித்துள்ளார். (உ- 10)

SALE SALE

இதோ!

இன்று முதல்

உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!

மகாநதி வழங்கும்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

07-10-98 முதல் 19-10-98 வரையுமே

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
தீபாவளிப் புடைவைகளுக்கும்
சகல ரகங்களுக்கும் கழிவு உண்டு.

மகாநதி

புடைவை அகம்

[முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான நிறுவனம்]

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
4, நவீன சந்தை, சாவகச்சேரி.

சாரி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்கு
பிரத்தியேக காட்சி அறைகள்

16, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
IKUF நவீன சந்தை, (மேல்மாடி) சாவகச்சேரி.

(சி-5017)

## கரவெட்டி...

(முதலாம் பக்கத் தொடர்)

வீட்டுக்குச் சென்ற அவர் வீட்டு வாசலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சைக்கிளில் வந்த இருவர் அவருடைய வீட்டுக்குச் சென்று அவரைப் பற்றி விசாரித்ததாகவும் —

அதன் பின்னர் அவர் வீடு வந்த சமயம் அவர் சுடப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையில் எழுதுநராகப் பணிபுரியும் இவருக்கு 5 பிள்ளைகள். தற்சமயம் மனைவி கர்ப்பிணியாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரது நெஞ்சில் ஆறு வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் —

சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

சென்று கொழும்பு திரும்ப முடியாதுள்ளவர்களை திருகோணமலைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்தல். தற்சமயம் பருத்தித்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'வாதுவ' கப்பலை இதற்காகப் பயன்படுத்துவது.

★ கொழும்பிற்கு அரச பணியாக வந்து யாழ்ப்பாணம் திரும்ப முடியாதுள்ள யாழ். பிரதேச உதவி அரச அதிபர்களை விமானப்படை விமானங்கள் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தல்.

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்)

முன்னேற்றம் காணப்படாததையடுத்து விமானப்போக்குவரத்து திணைக்களம் தனிநபர் விசாரணைக்குழுவை அமைத்துள்ளது.

இக்குழு விரைவில் விசாரணைகளை ஆரம்பிக்கும் என்று சிவில் விமானப்போக்குவரத்து சுற்றுலாத் துறை அமைச்சுச் செயலாளர் டபிள்யூ. வி. எஸ். ஜயவர்த்தன தெரிவித்தார்.

அதே நேரம்-வடமேற்குப் பகுதியில் தேடுதல் நடத்தும் கடற்படையினர் மூன்று சடலங்களையும், இரு உயிர் காப்பு அங்கிகளையும் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-6-21)

## கடுஞ்சமர்

மாங்குளத்தில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அங்கு வெடிக்கும் குண்டுகளின் சத்தங்கள் வவுனியாவின் எல்லைப்புறக் கிராமங்களில் நேற்றுப் பகல் வரை கேட்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஹெரோயின்...

(முதலாம் பக்கத் தொடர்)

ராக் கடமையாற்றும் இந்திக மாரசிங்க (வியாங்கொட) என்பவர் 500 மில்லி கிராம் ஹெரோயினுடன் பலாலிப் பொலிஸாரினால் கடந்த 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று இவ்வழக்கை விசாரித்த நீதிவான் மு. திருநாவுக்கரசு குறிப்பிட்ட நபருக்கு மேற்படி தண்டனையை வழங்கினார்.

இதேவேளை போதைவஸ்துப் பொருள்கள் வைத்திருந்ததாகத் தெரிவித்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்த பலாலி விமான நிலைய வகுப்புத் தொழிலாளர்களான கே. ஏ. நாமல் பிரியந்த பெரேரா, எம். ஏ. எம் சாகுல்தீன், என். எஸ். ஜெயதேவ பெரேரா, டபிள்யூ. எ. என். வசந்த பெரேரா ஆகியோரின் வழக்கு யாழ். நீதிமன்றிலிருந்து மல்லாகம் நீதிமன்றத்திற்கு நேற்று முதல் மாற்றம்செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் இன்று எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-5)

## சடலங்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

னும் இடத்தில் உள்ள அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இராணுவத்தில் பணிபுரியும் அவரது சகோதரருக்கும் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் தமது சகோதரரான இராணுவ அதிகாரி பணிபுரிந்த யுத்த முனைப் பகுதியுடன் தொடர்பு கொண்டபோது தமது சகோதரர் உயிருடன் இருக்கும் தகவல் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் சகோதரரையும் கூட்டிக்கொண்டு அவர் வீட்டுக்கு சென்றார்.

அங்கிருந்தவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

அவர்கள் வீட்டில் ஒப்படைக்கப்பட்டிருந்த - பிரேதப் பெட்டியில் வைத்து 'சீல்' செய்யப்பட்டிருந்த — அந்தச் சடலம் இராணுவத்தால் பின்னர் பொறுப்பேற்கப்பட்டது.

இதேபோன்று மற்றொரு சம்பவம் அம்பாறையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி சண்டையில் பலியான சிப்பாயின் சடலம் ஒன்று அம்பாறை மாவட்டத்தில் முகத்தன என்னும் இடத்தில் உள்ள அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டு சடலம் புதைக்க ஏற்பாடு செய்யப்பட்ட சமயம் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்ட சிப்பாய் விடுமுறையில் வீடுவந்து சேர்ந்தார்.

அங்கு கூடியிருந்தவர்கள் அதிர்ச்சிக்குள்ளானார்கள்.

அங்கு ஒப்படைக்கப்பட்ட சடலமும் பின்னர் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

பிரேத பெட்டிக்குள் வைத்து அவை 'சீல்' செய்யப்பட்டு வழங்கப்படுவதால் உறவினர்களுக்கு சடலத்தை அடையாளம் காண முடிவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-21)

## ரூ. 5 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்)

துவக்கு, இரகசியப் பொலிஸ் அதிகாரி பிரேமரட்ண ஆகியோர் இம்மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (உ-21)

## ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தேச ஊக்குவிப்பு அலவன்ஸ் நிலுவையுடன் வழங்கப்பட வேண்டும்.

★ அதிபர்களுக்குரிய அதிகரிக்கப்பட்ட சம்பள நிலுவைகள் வழங்கப்பட வேண்டும் — என்பவை உட்பட ஆறு கோரிக்கையை வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலர்ளரிடம் முன் வைத்து அவர்கள் மேற்படி தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் மூதூர் கலாசார மண்டபத்தின் முன்பாக கூடிய ஆசிரியர்கள் ஊர்வலமாகப்புறப்பட்டு வலயக் கல்வி அலுவலகம் சென்றடைந்தனர்.

கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அவர்கள் கையளித்தனர்.

மூதூர் பிரதேச ஆசிரியர் தொழிற் சங்கங்களில் சம்மேளனம் இந்தத் தொழிற் சங்க நடவடிக்கையை ஏற்பாடு செய்திருந்தது.

## இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்)

வீதியில் — கன்னாகிட்டிக்கு அண்மையில் — வீடியோக் கடை நடத்தும் — பெருமாள் கோயிலடியைச் சேர்ந்தவரான — முருகையா ஸ்ரீஸ்கந்தராஜா (வயது 26) என்ற குடும்பஸ்தரே மோசமான முறையில் தாக்கப்பட்டுக் காயமடைந்தார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு முன்பின் தெரியாத சில சிப்பாய்கள் நேற்று முன்தினம் கடைக்கு வந்து 'டெக்' ஒன்று தருமாறு அவரைக் கேட்டதாகவும் —

யாராவது தனக்குத் தெரிந்த இராணுவத்தினரைக் கூட்டி வந்தால் அதைத் தரலாம் என்று அவர் தெரிவித்ததாகவும் —

அதற்காக வீடியோக்கடையில் வைத்து நேற்று முன்தினம் அவர் மோசமாகத் தாக்கப்பட்டதாகவும் — கூறப்படுகின்றது.

அதன் பின்னர் நேற்று யாழ்ப்பாணம் சிவன் கோயிலடி சந்திக்குக் கூட்டிச் செல்லப்பட்ட அவர், அங்கு வீதித்தடையில் வைக்கப்பட்டிருந்த மண்எண்ணெய் பரல் ஒன்றின் மீது ஏற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட சிப்பாய்களால் பொல்லுகள், தடிகளால் படுமோசமாகத் தாக்கப்பட்டார்.

அவ்வேளை சந்தியின் மூன்று வீதிகளிலும் வந்த மக்கள் வழிமறிக்கப்பட்டு இத்தாக்குதலைப் பார்த்துச் செல்லும்படி பணிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

நேற்றுக்காலை யாழ். நகருக்கு மக்கள் வந்து சேரும் வேளை — நட்ட நடுச் சந்தியில் — பகிரங்கமாக நடத்தப்பட்ட இத்தாக்குதலினால் காலையில் நகரில் மக்கள் மதியில் பெரும் அதிருப்தியும் விசனமும் நிலவியதை அவதானிக்க முடிந்தது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து பலாலியில் உள்ள உயர் இராணுவ அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து மேற்படி மூன்று சிப்பாய்களும் உடனடியாக இராணுவப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. இத்தாக்குதலின் பின்னணியில் வேறு யாரும் இருந்தனரா என்பதும் ஆராயப்படுவதாக ஒரு தகவல் தெரிவித்தது.

இச்சம்பவம் குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவ உயரதிகாரி ஒருவர் உறுதியளித்தார்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறை வேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org